Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

லொயிலாஸ்
கல்யாண மண்டபம்
59, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2223352
எங்கள் சேவை
உங்கள் தேவைக்கே!
புதுவருட நல்வாழ்த்துக்கள்
(சி-361)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 27 (01-01-2003) புதன்கிழமை இதழ் : 92



மாலதி படையணிப் போராளிகள் ஒன்றுகூடலில், தேசியத் தலைவர்- 'வெஞ்சமரின் வரிகள்' ஒலிப்பேழையின் இசையமைப்பாளர் எஸ்.பி. ஈஸ்வரநாதனுக்கு பரிசு வழங்கிக் கெளரவிக்கிறார்.

### யாழ். கோட்டைப் பகுதியில்

# புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும்வரை நகரிலிருந்து படை விலகல் தாமதமாகும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலிருந்து இராணுவப் பிரிகேட் அலுவலகம் அகற்றப்படுவது மிகவும் காலதாமதம் அடையும் சூழல் உருவாகியுள்ளது. மேற்படி பிரிகேட் அலுவலகம், யாழ். கோட்டைப் பகுதிக்கு இடமாற்றப்படவுள்ளது. ஆனால், அப்பகுதியில் தங்குமிட வசதி எதுவும் தற்போது இல்லை. எனவே, அங்கு கட்டட வசதிகளை ஏற்படுத்தத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ். பொலிஸ் நிலையம் முன்னர் இருந்த இடத்தில் கட்டடம் அமைப்பதா அல்லது மாநகரசபை இருந்த பகுதியில் கட்டடங்களை அமைப்பதா என்பது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது. புதிய கட்டடங்களை அமைத்த பின்னரே யாழ்.நகரில் உள்ள மேற்படி பிரிகேட் படைமுகாம் அங்கிருந்து அகற்றப் படும் என்று தெரியவருகிறது. (க)



அனைவருக்கும்
எமது
புத்தாண்டு
வாழ்த்துக்கள்

# உயர் பாதுகாப்பு வலய அறிக்கை பிரதமர் ரணிலிடம் சமர்ப்பிக்கப்படும்!

## மிலிந்த குழுவினர் பல தரப்பையும் சந்தித்தனர்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள அதி பாதுகாப்பு வலயங்கள் பற்றி நேரடியாக ஆராய்வதற்கென நேற்று - இங்கு வந்திருந்த அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல உள்ளடங்கிய உயர்மட்டக்குழு - தனது ஆய்வறிக்கையை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உடனடியாகக் கையளிக்கவுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் பிரதமர் ரணில் சில முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளலாம் என்றும், இதன் தொடர்ச்சியாக - தாய்லாந்து பேச்சுக்களில் இந்த விவகாரம் ஆராயப்படலாம் எனவும் தெரியவருகிறது.



யாழ். கரையோரப்பகுதியைப் பார்வையிடும் ஒஸ்ரின். மிலிந்த. மகேஸ்வரன் ஆகியோரை முதலாவது படத்திலும் - மிலிந்த. சரத் பொன்சேகா ஆகியோர் நிலவரத்தையிட்டு யோசனை செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# குருநகர் கரையோர படையினரை 200 மீற்றர் பின்நகர்த்த முடிவு!

### நேற்றைய உயர்மட்ட சந்திப்பில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் கடற்தொழில் செய்வதற்கு வசதியாக, சுமார் இருநூறு மீற்றர் தூரம் வரையான கடற்கரைப் பிரதேசத்தில் இருந்து படையினர் விலகுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

யாழ். 512 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் விசேட கூட்டம் ஒன்று நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் மிலிநத மொறகொட, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, யாழ் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, யாழ். பிரதித்தளபதி இரட்ணசபாபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. இதனைவிட குருநகரில் மீன் பிடிப்பதற்காக கடலுக்குச்செல்லும் நுழைவாயில்களை மேலும் பல இடங்களில் திறந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கரையோரப் பகுதிக்கு விஜயம்!

உயர் படைத்தளபதிகள் சகிதம் அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தார். யாழ். குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக ஆராய்வதற்காகவே அமைச்சர் மற்றும் படைத்தளபதிகள் யாழ்ப்பாணம் விஜயம் செய்தனர்.

நேற்றுக்காலை பலாலிப்படைத்தளத்துக்கு வருகைதந்த இக்குழுவினர் அங்கு நடைபெற்ற படையதிகாரிகளுடனான விசேட மாநாட்டில் கலந்து கொண்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பொன்னாலையில் மக்கள் மீளக்குடியமர முடியுமாம்!

### எனினும் பிரதான வீதி படையினர் கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை உயர் பாதுகாப்பு வலயம் அல்ல. அங்கே பொதுமக்கள் வந்து மீளக்குடியமர்ந்து கொள்ள முடியும்.

- இவ்வாறு, நேற்று யாழ். நகரில் உள்ள 512 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உயர் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், இப்பகுதிக்கூடாகச் செல்லும் பிரதான வீதி தமது படைத்தளங்களுக்கான முக்கியமான விநியோகப் பாதை என்றும், அதைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புவதாகவும் படை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

பொன்னாலைக் கிராம மக்கள்- தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி, கடந்த இரு நாட்களாக வலி. மேற்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

### விண்ணாணம் விநாசியர்



சாண் ஏறுறம் எண்டு சொல்லிப் போட்டு மீற்றர்கணக்கில எல்லே சறுக்கினம்...

# கடலோரக்காற்று வெளியிடப்பட்டது



கடற்புலிகளின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி, நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட, 'கடலோரக் காற்று' முழுநீளத் திரைப்படத்தின் வெளியீட்டு விழா, நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நிதர்சன நிறுவன மகளிர் பொறுப்பாளர் பிரமிளா தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றது.

விழா ஆரம்பத்தில் பொதுச்சுடரினை

(12ஆம் பக்கம் பார்க்க)

யாழ். - கொழும்பு பிரயாண சேவை

விசேட கட்டணக் குறைப்பு

யாழ் - கொழும்பு - 900/-
யாழ் - திருமலை - 800/-
யாழ் - வவுனியா - 600/-

குறிப்பு :- எமது ஸ்தாபனத்தில் பதிவு செய்பவர்களுக்கு மட்டும் இச்சலுகை.

செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-371)


# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 | | 12 |
| ~ | | ~ |
| 06 |  | 01 |
| ~ | | ~ |
| 1979 | | 2002 |

## திருமதி நகுலேஸ்வரன் விஜயரூபி

திதி ~ 01.01.2003

ஓராண்டு மறைந்ததம்மா ~ உன்
ஒளிமுகமோ தெரியுதம்மா
எம்மைவிட்டு ஏன் மறைந்தாய்
எமக்கு யார் துணையம்மா
பிள்ளைகளை மறந்தாயோ
பிள்ளை செய்த பாவமென்ன
எத்தனை ஆண்டு சென்றாலும்
உன்நினைவு மறையாது
தினமுருகி கலங்குகிறோம்
திரும்பி நீ வருவாயா.

*8 ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

(081)

கணவன்,
பிள்ளைகள்.

## மாணவியின் மர்ம மரணத்திற்கு கண்டனக் கூட்டம்

உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய, தரம் ஐந்து மாணவி செல்வராசா துவாரகா (வயது 10) மர்மமான முறையில் மரணமடைந்தமைக்கு நியாயமான தீர்வு வழங்கக் கோரி நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை முன்றலில் கண்டனக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் பொதுமக்களால் நடாத்தப்படும் இக்கண்டனக் கூட்டத்திற்கு, கல்வியலாளர்கள் மற்றும் சமூகத்தலைவர்களுக்கு நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (கி,ச)

## மீண்டும் நியமனம்

தென்மராட்சிப் பிரதேச செயலராக மீண்டும் பு.சுந்தரம்பிள்ளை நியமிக்கப்படவுள்ளார்.

ஜனவரி 9 ஆம் திகதி இவர் தனது பதவியினை வைபவரீதியாக ஏற்றுக்கொள்ளவுள்ளார். இப்பிரதேச செயலக தற்காலிக செயலராக இருக்கும் எஸ்ஸ்ரீனிவாசன் வரும் 9ஆம் திகதிக்குப்பின் யாழ். செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார். (25)

## அரசு யுத்தத்துக்குள் நாட்டைத் தள்ளாதாம்!

(கொழும்பு)


ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் எக்காரணம் கொண்டும் நாட்டை யுத்தத்துக்குள் தள்ளாது என மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.


ராஜா
யாழ்ப்பாணம்.

இன்று முதல் குதூகல ஆரம்பம்
முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
சுந்தரா டிராவல்ஸ்
10.30, 2.30, 6.00
எமது ரசிகர்கள் அனைவருக்கும புத்தாண்டு
398)

நிரஞ்சனாஸ் சங்கானை
அஜித், மீனா நடித்த
வில்லன்
11.00, 2.45, 6.00 (பு.நே.) (சி/397)


# 16 ஆம் நாள் நினைவஞ்ச



## அமரர்
## சுப்பிரமணியம் மகேஸ்வரலிங்கம்

தோற்றம் 15~04~1943 மறைவு 17~12~2002

"உற்றாரும் உறவினரும் நண்பர்களும்
உன்நினைவை என்றென்றும் போற்றிச் செல்வர்
கற்றாரும் போற்றிட நீ சேவை செய்தாய்
காசியினில் சிவன்தாள் பக்தி செய்தாய்"

*அன்னாரின் பிரிவால் துயருறும்...*

*சிவன் கோவிலடி,*
*இணுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(080)

மனைவி,
மக்கள்,
சகோதரர்கள்.

# இன்றைய நாள் இனிய நாள்

சித்திரபானு ஸ்ரீ, மார்கழி மீ, - 17ஆம் திகதி

| | |
|---|---|
| *திதி* | :- அபரபட்ச சதுர்த்தி பின்னிரவு - 3.38 வரை அதன்மேல் அமாவாசை. |
| *நட்சத்திரம்* | :- கேட்டை - மாலை 6.49 வரை, அதன் மேல் மூலம். |
| *சித்த யோகம்* | :- மாலை - 6.49 வரை |

**01-01-2003 - புதன்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தேகசுகக்குறைவு, பொருளாதாரப் பிரச்சினை, ஓய்வெடுப்பது உடலுக்குகந்தது, எந்தப் புதிய வேலைகளையும் தாமதிப்பது நன்று, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |
| இடபம் | :- தேகசுகம் நன்று, பணவரவு, தெய்வதரிசன பலன், பெண்கள் மகிழ்வு, அறுசுவையுண்டி, ஆடையாபரண பலன், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மிதுனம் | :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, கடன் வசூல், எதிரி தலைமறைவு, நோய் நீக்கம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம், வியாபாரச் சமநிலை. |
| கர்க்கடகம் | :- தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, வைத்தியச் செலவு, சமூகசேவையில் ஈடுபடுவது நன்றல்ல, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரமுன்னேற்றம், |
| சிங்கம் | :- தேகசுகக்குறைவு, மாதா சுகக்குறைவு, வைத்தியச் செலவு, வாகனச்செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கன்னி | :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, செய்தொழில் லாபம், மன தைரியத்துடன் செய்தால் வெற்றி, பெண்களால் சண்டை, வீட்டில் விவாத மேடை, மனச் சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் | :- தேகசுகக்குறைவு, செலவு தானாகத் தேடிவரும், வீண் அலைச்சல், பெண்களால் சண்டை, வீட்டில் விவாத மேடை, மனச்சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம். |
| விருச்சிகம் | :- தேகசுகம் நன்று, பணவரவு, தன்னையறியாத மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, ஆடையாபரண மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| தனு | :- தேகசுகக்குறைவு, பணக்கஷ்டம், மனச்சஞ்சலம், எடுத்த காரியம் தடை, வீண்செலவு, அயலில் மௌனம் சாதிக்கவும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மகரம் | :- தேகசுகம் நன்று, தெய்வ வழிபாடு, சமய அறிஞர் தரிசனம், வீட்டில் மகிழ்ச்சி, செய்தொழில் லாபம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கும்பம் | :- தேகசுககம் நன்று, செய்தொழில் லாபம், எடுத்த காரியம் வெற்றி, சமூகசேவையில் மதிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம். |
| மீனம் | :- தேகசுகக்குறைவு, பிதாவின் தேகசுகம் பாதிக்கப்படும், வைத்தியச்செலவு, சமூகசேவையில் ஈடுபடுவது நன்றல்ல, தேவையற்ற பயம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |


நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்

இதோ யாழ்.நகரில்

Yarl beach in
யாழ். பீச் இன்

(Sea Food Restauran

★ குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்
(A/C Rooms & Non A/C Rooms)
★ கார் தரிப்பிட வசதி
(Car Park Facilities)
★ மகா நாட்டு மண்டபம்
(Conference Hall)
★ இணைக்கப்பட்ட குளியலறை
(Attached bath room)
★ கீழைத்தேய மேலைத்தேய உணவுகள்
(Eastern & Western Meals)
★ 35 வருடகால அனுபவம் வாய்ந்தோரின் சேவை
35 Years Long term heritage in the hotel industry




- Under Taking Wedding Celebrations & Orders
- Sunday Special - Pizza

No. 8, Old Park Road,
Jaffna.
Tel/Fax: 021-2225490

உரிமையாளர்,
சிலுவைராசா.

(சி-393)

# விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் மீது தமிழ் மக்கள் முழுநம்பிக்கை வைத்துள்ளனர்

## வட - கிழக்கு மாகாண பிரதம செயலாளர்

(திருகோணமலை)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் மீது முழுமையான நம்பிக்கையை வைத்துள்ளனர் என வட



கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜா, தமிழிலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், தமிழ் மக்கள் தமது இராணுவ பலத்துடனேயே பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை நடத்தப்பட்ட போராட்டங்களில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பங்கெடுத்திருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் தமிழ்த் தலைமைகள் அரசாங்கங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்தபோதும், சிங்களக் கட்சிகளின் தலையீட்டினால் அவை தோல்வி காண நேரிட்டது.

இன்றுள்ள நிலை வித்தியாசமானது, இப்போதைய தமிழ் மக்களின் தலைமையை எவரும் ஏமாற்ற முடியாது. தமிழ் மக்கள், புலிகள் மீது முழுநம்பிக்கை வைத்துள்ளனர். உலகம் முழுவதும் தமிழ் மக்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இதில் பெண்களினது பங்களிப்பு மிகவும் முக்கியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப.5.30 மணியளவில் "நானோ இதற்கு நாயகமோ" என்னும் தலைப்பில் சிவமகாலிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

## முட்டை விலை உயர்வு

குடாநாட்டில் முட்டையின் விலை அதிகரித்துள்ளது. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு முட்டையின் பாவனை அதிகரித்துள்ளதாலேயே இவ்விலை உயர்வு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. தற்போது முட்டை 12 ரூபாவாக விற்பனையாகி வருவது குறிப்பிடத்தக்கது. (96)

# ராணுவத்தைப் பயன்படுத்தி அமைதியைக் குழப்ப முயற்சி!

## மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் கண்டனம்

(மன்னார்)

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு அரசாங்கம் தீர்வொன்றினைக் காண வேண்டும். இல்லையேல் சமாதான முயற்சி பெரும் பாதிப்படைவதுடன், கவலைதரும் விடயமாகவும் மாறிவிடுமென - மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் தெரிவித்தார்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் பற்றிய சர்ச்சை தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். பல சூழ்ச்சிகளின் பின்னணியிலேயே இந்தச் சர்ச்சை தோன்றியுள்ளது. மக்களுக்குத்தான் பாதுகாப்பு வேண்டும்.

அதியுயர் பாதுகாப்பு விடயம் குறித்து ஆராய உபகுழு உள்ளது. ஆனால் - இவ்விடயம் குறித்து, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி கருத்துக்களை வெளியிட்டிருப்பது தலை இருக்க வால் ஆடும் செயற்பாடாகும்.

சமாதானத்தை விரும்பாத சக்திகள் இராணுவத்தை வைத்து சமாதான முயற்சிகளைக் குழப்ப முயல்கின்றன என்றும் மன்னார் ஆயர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# பேச்சுகளில் முஸ்லிம் பிரமுகர்கள் பார்வையாளர்களாகப் பங்கேற்பு?

(கொழும்பு)

அடுத்த கட்டச் சமாதானப்பேச்சுக்களில் முஸ்லிம் பிரமுகர்கள் நால்வரைப் பார்வையாளர்களாக அனுமதிப்பதற்கு அரசதரப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸினுள் ஹக்கீம் அணிக்கும் அதாவுல்லா அணிக்கும் இடையிலான முறுகல் நிலையையடுத்து இத்தகைய பார்வையாளர்கள் பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டும் என அதாவுல்லா அரசிடம் கோரிவந்தமை தெரிந்ததே.

எனினும்- அரச தரப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் பேச்சுக்களில் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இறுக்கத்தைத் தணிக்கப் பேச்சு; அரசு, புலிகளுக்கு அழைப்புக்கடிதம்

## யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அனுப்பியது

உயர்பாதுகாப்பு வலயப் பிரேரிப்புகள் தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு, விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜனவரி 10 ஆம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்கும் இடையில் நேரத்தை ஒதுக்கித் தருமாறு கண்காணிப்புக்குழு புலிகளைக் கேட்டுள்ளது.

முகமாலையில் இச்சந்திப்பினை நடத்துவது தொடர்பாக கண்காணிப்புக்குழு- புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், பேனாட் குணதிலகவுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே நோர்வே சென்றுள்ளதால், அவர் 9 ஆம் திகதி கொழும்பு திரும்பிய பின்னரே- 10 ஆம் 15 ஆம் திகதிகளுக்கிடையில் இக்கலந்துரையாடல் நடத்துவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.

# சர்ச்சைக்குரிய தொழில்நீக்கச்சட்டம் நாடாளுமன்றில் உடன் சமர்ப்பிக்குக

## அரசிடம் பொ.ஐ.மு.கோரிக்கை

கைத்தொழில் பிணக்குச் சட்டமூலம் மற்றும் தொழில் நீக்கும் சட்டத்திருத்தச் சட்டமூலம் ஆகிய இரண்டு சட்ட மூலங்களையும் திட்டமிட்டபடி 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொதுஜன ஐக்கிய முன்னணி, அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

மேற்படி இரு சட்டமூலங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்கங்கள், எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் எதிர்ப்பியக்கத்தை நடத்தவுள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் கடந்த வாரம் எதிரணி கட்சி அரசியல் தலைவர்களைச் சந்தித்து இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இதுவரை தொழிலாளர்களுக்கு இருந்த உரிமைகள் அனைத்தையும் தொழில் நீக்கும் திருத்தச் சட்டம் முற்றாகப் பறிக்கின்றது. உததேசத் திருத்தச் சட்டத்தின்படி தொழிலாளியை தொழில் ஆணையாளரின் அனுமதியுடன் மூன்று நாட்களுக்குள் நீக்கலாம். தொழிலாளிகளுக்கு கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டையும் கம்பனியே நிர்ணயிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

# நாடுதிரும்பிய கடற்படைத்தளபதி சந்திரிகா, மாரப்பனவுடன் பேச்சு

(கொழும்பு)

இந்தியக் கடற்படையதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி விட்டுத் திரும்பிய கடற்படைத் தளபதி- ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்து விபரங்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த வாரம் இந்தியக் கடற்படையதிகாரிகளுடன் பேச்சுக் களை நடத்துவதற்காக கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்திகிரி புதுடெல்கி சென்றிருந்தார்.

நேற்று முன்தினம் நாடு திரும்பிய இவர், உடனடியாக ஜனாதிபதி சந்திரிகா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரைத் தனித் தனியாகச் சந்தித்து, இந்திய விஜயத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து விளக்கமளித்தார்.

இந்திய - இலங்கைக் கடற்படையினர் கூட்டுப்பயிற்சித் திட்டம் குறித்தும், கூட்டுரோந்து குறிததும் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல் நடத்துவது தொடர்பாகவும் கடற்படைத்தளபதி மேற்படி சந்திப்புக்களில் விபரித்ததாகத் தெரியவருகின்றது.

## 4 இந்திய மீனவர்கள் விடுதலை

(பருத்தித்துறை)

இந்திய மீனவர்கள் நான்கு பேரை நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் வடபகுதிக் கடற்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

# தெற்காசியாவில் இலங்கையும் உயர்பாதுகாப்பு மிக்க நாடு!

தெற்காசியாவில் குண்டு வெடிப்புக்கள் நிகழாத - உயர் பாதுகாப்பு மிக்க பத்து நாடுகளில் இலங்கையும் இடம்பிடித்திருப்பதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னர் தெற்காசியாவில் அச்சத்துக்குரிய ஒரு நாடாக இருந்த இலங்யையில் - சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதால் இந்த மாற்றம் வேகமாக ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுளளது.




வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 15 ஆவது சான்றிதழ் வழங்கும் விழாவும் அண்மையில் நடைபெற்றபோது, விழாவுக்குத் தலைமை வகித்த கழகத்தலைவர் இ.குலசிங்கம் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# யாழில் காணாமற் போனோர் தொடர்பாக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கலாகும்!

## காணாமற்போனோர் குடும்ப அங்கத்தவர் அமைப்பு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோர் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக, காணாமற்போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான கொழும்பு அமைப்பு- பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தில் காணாமற்போன 617 பேரின் விடயமாக நீதியான விசாரணை நடத்தும்படி ஜெனிவாவில் இயங்கும் மனித உரிமைக் குழுவிற்கு முறையீடு செய்துள்ளோம். இந்த மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக 4 வருடத்துக்கான நிதியினை ஐரோப்பிய யூனியன் வழங்கியுள்ளது. இந்த நிதியினை காணாமற்போனோரின் பாதுகாவலர்கள் முழுமையாகப் பயன்படுத்த வேணடும்.

யாழ்.மனித உரிமைக் குழு சுதந்திரமாக, நீதியாக இயங்க வேண்டுமானால் தமது தரப்பிலும் இரு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் காணாமற்போனோரின் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

# புதிய வருடத்தில் கல்வி அபிவிருத்தி யாழ்.நகரில் நடந்த ஆய்வுப்பட்டறை

## புதிய திட்டங்கள் பலவும் தயாரிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் புதிய ஆண்டில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான ஆய்வுப்பட்டறை நேற்று முன்தி னம் யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஏற்பாடு செய்த இந்நிகழ்வு காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிவரை நடைபெற்றது.

இப்பட்டறையில்- தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், பிரதேசக் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில்,

அடுத்த கல்வி ஆண்டில் குடாநாட்டின் மாணவர்கள், ஆசிரியர்களுடைய கல்வித்திறனை விருத்தி செய்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

முன்பள்ளி, ஆரம்பப்பிரிவு, இடைநிலைப் பிரிவு, கலைப்பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, உடற்கல்வி, ஆசிரியர் வாண்மைவிருத்தி செய்வது தொடர்பாக குழுக்கள் அமைக்கப்பட்டு மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுப் புதிய கல்வியாண்டில் இவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ச,கி)

# கிறிஸ்தவக் கல்லூரியின் முத்திரை வெளியிடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆண்டு நிறைவை



யொட்டி ஞாபகார்த்தமாக முத்திரை வெளியீடு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத் தலைவர் வி.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் முதல் முத்திரையைப் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வடபிராந்தியப் பிரதித் தபால்மா அதிபர் என் ஜெயரட்ணம், அஞ்சல் அத்தியட்சர் எஸ்.சிவராஜசிங்கம் கல்விப்பணிப்பாளர்கள் வீ.இராசையா, திருமதி மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிறைவு நாளையொட்டி 10 இலட்சம் முத்திரைகளை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகம் வெளியிட்டுள்ளது.

(ச,கி)

### தனியார் காணிகளிலும் அமைக்கப்பட்ட அங்காடி

# சட்டச் சிக்கலைத் தவிர்த்துக் கொள்ள காணிவிபரம் தேடுகிறது மாநகர சபை

(யாழ்ப்பாணம்)

தனியார் காணியில் அங்காடி வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றதா என்பது குறித்து யாழ். மாநகரசபை தற்போது ஆராய்ந்து வருகின்றது.

முனீஸ்வரன் வீதியில், அண்மையில் அங்காடி வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றில் சில கடைகள் தனியாருக்குச் சொந்தமான காணியில் அமைக்கப் பட்டிருப்பதாக அக்காணிகளின் உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அத்துடன் சட்ட நடவடிக்கைக்காகவும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

மேற்படி நிலைமை உருவாகியதைத் தொடர்ந்து, யாழ். மாநகர சபை துரிதமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது. முனீஸ்வரன் வீதியில் தமக்குச்சொந்தமான காணியின் விஸ்தீரணம் எவ்வளவு என்பது குறித்தும், அதன் தெளிவான எல்லைகள் எவை என்பது குறித்தும் யாழ்.மாநகர சபைக்கு அண்மைய நாள் வரை விபரம் தெரியாமல் இருந்தது.

காணிச்சொந்தக்காரர்கள் சிலர் அப்பகுதியிலுள்ள தமக்குச்சொந்தமான காணிகளின் உறுதிகள் சகிதம், யாழ்.மாநகர சபைக்கு சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து, யாழ் மாநகரசபை நில அளவைத் திணைக்களத்தை நாடிச் சென்றது. அவர்களிடமிருந்து மாநகர சபைக்குச் சொந்தமான காணியின் வரைபடம் ஒன்றைத் தற்போது பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வரைபடத்தின் அடிப்படையில் அதற்குரிய காணிக்குத் தெளிவான எல்லைகளைப் போடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன்போதுதான் தனியார் காணிகளில் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் கடைகளை அகற்றிக் கொள்வதற்கு சந்தர்ப்பம் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ் விடயம் தொடர்பாக மேலதிக விபரங்களை யாழ். மாநகரசபை திரட்டி வருகிறது. இதன்மூலம் சடட நடவடிக்கைக்குட்படுவதை யாழ். மாநகர சபை தவிர்த்துக்கொள்வதற்கு முயற்சி செய்துவருகிறது.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்.



பெயர் : யோ.ஜிந்துஜா
முகவரி : கொத்துக்கட்டி வீதி, நவாலி தெற்கு.

எட்டாவது அகவையில்.





பெயர் : றோ.சர்மி றொனிசியா
முகவரி : 56/3, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


# சமுர்த்தி உத்தியோகத்தருக்கும் இடமாற்றம்!

## புதிய நடைமுறைகள் இவ்வருடம் அமுல்

நாட்டிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைகளை மறுசீராக்கம் செய்வதற்கும், வினைத்திறனுடன் செயற்படவும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபை இவ்வருடம் முதல் புதிய நடைமுறைகளை அமுல்படுத்த இருக்கின்றது.

இத்திட்டம் அடங்கிய சுற்று நிருபங்களை, சமுர்த்தி அதிகார சபை நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

பரதேச செயலகங்களில் மேலதிகமாகக் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தேவைப்படும் இடங்களுக்கு இடமாற்றக்கூடிய சூழ்நிலை எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுக்கும் ஒவ்வொரு சமுர்த்தி உத்தியோகத்தர் இருக்கவேண்டும்.


சமுர்த்தி வங்கி ஒன்றுக்கு ஒரு சமுர்த்தி முகாமையாளரும், 5 எழுதுவினைஞர்களும் இருக்க வேண்டும். சமுர்த்தி மகாசங்கம் ஒன்றுக்கு பத்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், வலயமொன்றுக்கு உதவி முகாமையாளர் என்ற ரீதியில் இரு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட உள்ளனர்.

மேற்படி ஆளணிக்கு மேற்பட்டதாக இருக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் - வெற்றிடமாகவுள்ள பகுதிகளுக்கு அனுப்பப்படலாம் எனவும் தெரிய வருகிறது.


பிரதேச செயலர்கள் தங்கள் பிரிவுக்குத் தேவையான ஆளணியைத் தீர்மானிப்பதோடு, மேலதிக அலுவலர்களின் விபரங்களை சமுர்த்தி அதிகாரசபைக்கு விரைவில் அனுப்பிவைக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (100)




(சி/390)



# மாணவர் மலர்




# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்

## வினாப்பத்திரம் - 1


★ அவதானிப்பு (OBSERVATION)

✻ கூட்டினுள் தரப்பட்ட வடிவங்களை அவதானியுங்கள். அங்கு உள்ள எல்லா வடிவங்களையும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.




★ வரைவிலக்கணம் (INTERPRETATION)

✻ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு இவ்வரைபுகளைப் பயன்படுத்துக.




*2000ஆம் ஆண்டில் A,B,C,D எனப்படும் நான்கு பாடசாலைகளிலே, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை.*

*2000ஆம் ஆண்டில் A,B,C,D எனப்படும் நான்கு பாடசாலைகளிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை.*

1. சித்தியடைந்த பிள்ளைகளில் பெண்பிள்ளைகள் 1/5 பங்கினர் எனில், 4 பாடசாலைகளிலும் சித்தியடைந்த ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு?
   (1) 140 (2) 150 (3) 160

2. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 1/5 பங்கினர் மட்டும் சித்தியடைந்த பாடசாலை எது?
   (1) A (2) C (3) D

★ தகவல்களின் ஒழுங்கமைப்பு (ORGANISATION OF INFORMATION)

✻ கீழே தரப்பட்டுள்ள வினாவிலுள்ள சம்பவம் தொடர்பான உரையாடலில் ஒழுங்கு மாறுபட்டுக் காணப்படுகின்றது. இந்த உரையாடலை ஒழுங்குமுறைப்படி திருத்தமாகக் குறிப்பிடும் விடையின் கீழே கோடிடுக.

1. ஆசிரியை பிள்ளைகளிடம் குமிழ்முனைப் பேனாவினால் எழுத வேண்டாம் எனக் கட்டளையிட்ட சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த உரையாடல்.
   A. அப்படியானால் உங்களின் கையில் பேனா இருப்பது ஏன்?
   B. எங்களைக் குமிழ்முனைப் பேனாவினால் எழுதவேண்டாம் என ஆசிரியர் கூறினார் அல்லவா?
   C. நான் பென்சிலைத் தருகிறேன்.
   D. ஆம், எழுத்துக்கள் அழகில்லாது போகும் என்பதால் பென்சிலால் எழுதும்படி ஆசிரியை கூறினார்.
   E. நான் இன்று பென்சிலைக் கொண்டுவர மறந்துவிட்டேன்.
   (1) EDACB (2) BADCE (3) BDEAC

★ தொடர்பு காணல் (SEEING RELATIONSHIPS)


✻ கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் காணப்படும் சொற்களை நன்கு விபரிக்கின்ற கூற்றினைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

1. வங்கி என்பது
   (1) பணக்கொடுக்கல் வாங்கல் செய்யும் இடம்.
   (2) பணத்தைச் சேமிக்கும் இடம்.
   (3) பணத்தைக் கடனாக வழங்கும் இடம்.

2. தொழிற்சாலை என்பது
   (1) பொருட்கள் பரிவர்த்தனை செய்யப்படும் இடம்.
   (2) பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் இடம்.
   (3) பொருட்கள் விற்பனை செய்யும் இடம்.

★ மொழி பெயர்ப்பு (TRANSLATION)

✻ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு பல்வேறு வடிவங்களையும் வெவ்வேறு இயல்புகளையும் கொண்ட பின்வரும் உருக்களைப் பயன்படுத்துக.





ஒத்த இயல்புகள் உள்ள மூன்று உருக்களைக் காட்டும் விடையின் கீழே கோடிடுக.
(1) CFK (2) BEG (3) DHJ

ஒத்த இயல்புகள் இல்லாத மூன்று உருக்களைக் காட்டும் விடையின் கீழே கோடிடுக.
(1) CJL (2) AFL (3) DIK

★ எதிர்வுகூறல் (PREDICTION)

✻ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக. A, B ஆகிய இரு படங்களிலும் தரம் 5 மாணவர் ஒருவர் பரிசோதனைக்காக ஒரு அறையின் உள்ளேயும் வெளியேயும் வளர்க்கின்ற ஒரே இனத்தைச்சேர்ந்த இரு செடிகளின் படங்கள் காட்டப்பட்டுள்ளன.




இந்த இரு உருக்களிலும் 1, 2, 3 என்ற இலக்கங்களால் காட்டப்படுவது, 1 ஆவது வாரத்திலும் 2ஆவது வாரத்திலும் 4ஆவது வாரத்திலும் நிகழ்ந்த செடிகளின் வளர்ச்சி நிலையாகும். இக்கால எல்லைக்குள் இச்செடிகளுக்குத் தினமும் ஒரே அளவிலான பசளை இடப்பட்டு நீரும் ஊற்றப்படுகிறது. இப்பரிசோதனை மூலம் வெளிக்காட்டப்படுவது.

1. செடியின் வளர்ச்சிக்கு நீரும், பசளையும் மட்டும் போதுமானவையல்ல என்பதாகும்.
   (1) உண்மை (2) பொய் (3) கூறமுடியாது
2. செடியின் வளர்ச்சிக்கு நீர், பசளை ஆகியவற்றுடன் சூரிய வெளிச்சமும் அவசியமாகும் என்பதாகும்.
   (1) உண்மை (2) பொய் (3) கூறமுடியாது
3. நான்கு வாரங்களின் பின் அறையினுள் வளர்ந்த செடி வாடியிருப்பின், இரு செடிகளினதும் வளர்ச்சி வேகம் சமமாயிருந்தது என்பதாகும்.
   (1) உண்மை (2) பொய் (3) கூறமுடியாது

★ பிரசினங்களைத் தீர்த்தல் (PROBLEM SOLVING)


✻ பிரதீபன், விஜயன், கரீம், ராஜா என்ற நால்வரும் ஓட்டப்பந்தயப் போட்டியில் பங்குபற்றினர். ராஜா கரீமை விட வேகமாக ஓடியபோதும் பிரதீபனுக்கு பின்னாலேயே ஓடினான். எனினும், பிரதீபன் விஜயனை விட வேகமாக ஓட முடியவில்லை. பிள்ளைகள் எவ்வாறு பந்தயத்தை ஓடி முடித்தனர் என்ற ஒழுங்குமுறையைக் காட்டும் நிரலைத் தெரிவு செய்க.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (1) விஜயன் | (1) ராஜா | (1) பிரதீபன் |
| (2) பிரதீபன் | (2) கரீம் | (2) கரீம் |
| (3) ராஜா | (3) பிரதீபன் | (3) ராஜா |
| (4) கரீம் | (4) விஜயன் | (4) விஜயன் |

(.........)

★ கோலங்களின் புலக்காட்சி (PERCEPTION)

✻ கீழே தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியை அதற்கு அருகில் உள்ள மூன்று உருக்களிருந்தும் தெரிவு செய்து அதன்கீழே கோடிடுக.



வி.என்.எஸ்.உதயச்சந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.
(ஆசிரியர். கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி)

# General English for G.C.E A/L



## Describing People

In describing people we can use the present tense. Sometimes present continuous tense also is used for describing people.

Adjectives are the most important parts which describe qualities.

Here are some words, expressions and structures that can be used for describing people's appearances.

**Hair:-** long, medium ........
Eg:- Her hair is long.

**Eyes:-** black, brown ........
Eg:- She has black eyes.

**Nose:-** flat, long ........
Eg:- His nose is flat.

**Mouth:-** wide, thinlips ........
Eg:- Her mouth is wide.

**Chin:-** pointed, firm ........
Eg:- My mother's chin is firm.

**Face:-** oval, round ........
Eg:- Her face is round.

**Fore head:-** high, low ........
Eg:- Our class teacher's fore head is very high.

6ஆம் பக்கம் பார்க்க



# க.பொ.த. உயர்தரம்

## அளவையியலும் விஞ்ஞானமுறையும்

### சமூக விஞ்ஞானம்

இத்தலைப்பானது மாணவர்களால் தவிர்க்கப்பட்டு வருவதும் ஆசிரியர்கள் இதனைக் கற்பிக்க தவறுவதால் அளவையியல் பகுதி - IIஇல் மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுகிறது. இதனை நீக்கி மாணவர்கள் இலகுவில் விளங்கிக்கொள்ள ஏற்ற வகையிலும் மாணவர்களைக் கற்பிக்கத் தூண்டும் வகையிலும் இத்தலைப்பு பிரசுரிக்கப்படுகின்றது.

**சமூக விஞ்ஞானம் ஓர் நோக்கு:~**

மனித நடத்தை, சமூக நடத்தை பற்றிய ஒரு ஆய்வுத் துறையே சமூக விஞ்ஞானம் என்பர். இத்தகைய சமூக விஞ்ஞானம் - மனிதன், சமூகம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. இதற்குப் பின்வரும் துறைகளைக் காட்டலாம்.

(உ-ம்) பொருளியல், தொல்பொருளியல், வரலாறு, அரசியல், சட்டம், முகாமையியல், வணிகம், கணக்கியல், மானிடவியல், சமூகவியல், உளவியல்.

மேலும், சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் பரிசோதனைமுறை கையாள முடியாது. இதனால் இங்கு அவதானத்தின் அடிப்படையில் அமைந்த முறைகளே முக்கியம் பெறுகின்றன.

(உ-ம்) பேட்டிமுறை, வினாக்கொத்துமுறை, தனியார் ஆய்வு ஏடுகளின் ஆய்வுமுறை, மாதிரி போன்ற முறைகள்.

இவ்வகையான விஞ்ஞானங்கள் கூடுதலான அளவுக்கு இரண்டாம் தர விஞ்ஞானங்களாகக் கருதப்படுகின்றன. இக் கருத்துத் தொடர்பாகப் பின்வரும் வினாக்களில் மாணவர் கவனம் செலுத்தி அது தொடர்பான விடையை மாணவர் தேடல் முறையில் பெறுதல் வேண்டும்.

1) இக்கூற்றின் தாற்பரியம்?
2) இந்நிலை ஏற்படுவதற்கான காரணம்?
3) இன்று சமூக விஞ்ஞானங்கள் இந்நிலையில் இருந்து விடுபட மேற்கொள்ளும் நடவடிக்கை?

அடுத்து சமூக விஞ்ஞானங்களின் பயன்பாடுகள் பற்றி மாணவர் ஆய்வு செய்வது முக்கியமானது ஆகும்.

இவற்றில் பின்வரும் பயன்பாடுகளை மாணவர் உதாரணத்துடன் விளக்குதல் அவசியமானது ஆகும்.

★ சமூக விஞ்ஞானத்தின் துறையாகிய உளவியல் அறிவும், உளவியலில் உள்ள. கண்டுபிடிப்புக்களும் நடைமுறைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பயன்படுகிறது என விளக்குதல்.

★ சமூகத் தோற்றப்பாடுகளையும், சமூகத்தின் செயற்பாடுகளையும் விளங்கிக்கொள்ள சமூக விஞ்ஞானம் பயன்படுகிறது எனக் கூறுதல்.

★ அடுத்து, சமூக விஞ்ஞான அறிவானது சமூகம் முழுமைக்கும் பலவிதமான நன்மைகளை ஏற்படுத்துகின்றது என்பதை விளக்குதல்.

சமூக விஞ்ஞானங்களில் - அடுத்து, அங்கு பயன்படுத்தப்படும் விளக்க வகைகளை மாணவர் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். சமூக விஞ்ஞான விளக்கங்களானது பின்வருவன ஆகும்.

1. காரணகாரிய விளக்கம்.
2. நோக்கக் கொள்கை விளக்கம்.
3. தொழிற்பாட்டு விளக்கம்/செயற்பாட்டு விளக்கம்.

இவற்றை மாணவர் உதாரணத்துடன் தெரிந்து கொள்ளுதல் அவசியமானது ஆகும்.

அடுத்து, சமூக விஞ்ஞானத்துறைகளாகிய சிலவற்றில் உள்ள விஞ்ஞானத் தன்மையை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அதாவது - உளவியல், வரலாறு, தொல்பொருளியல் போன்ற துறைகளில் உள்ள விஞ்ஞானத் தன்மையை ஆராய்வது முக்கியமானதாகும். இங்கு, உளவியல் எனும் துறையை நோக்கும்போது - அங்கு இயற்கை விஞ்ஞான அம்சங்களும், சமூக விஞ்ஞான அம்சங்களும் காணப்படுகின்றன என்பதை - மாணவர், ஆசிரியர்களிடம் கற்க வேண்டும். மேலும், தொல்பொருளியலில் உள்ள விஞ்ஞான அம்சங்களை அறிதல். அடுத்து, வரலாற்றின் விஞ்ஞானத் தன்மையை நோக்குமிடத்து, வரலாற்றினுடைய விஞ்ஞானத் தன்மையும், வரலாற்றின் விஞ்ஞானம் அல்லாத் தன்மையும் மாணவர் அறிந்துகொள்ளுதல் அவசியம்.

அடுத்து, சமூகவிஞ்ஞானத்தின் எதிர்வுகூறலை நோக்கும்போது சமூகவிஞ்ஞானத்தில் வாய்ப்புப் பார்க்கக்கூடிய எதிர்வுகூறலைப் பெறுவது மிகவும் கடினமானது ஆகும். எடுத்துக் காட்டாக, கார்ல் மாக்சின் எதிர்வு கூறலை வாய்ப்புப் பார்க்க முடியாது. இதற்கான காரணங்களைக் குறிப்பிடுதல் அவசியமானதாகும். இவற்றில் முக்கிய காரணமாகச் சமூக விஞ்ஞானக் கோட்பாடுகள் கவர்பாடுடையதும், நிச்சயத்தன்மையற்றதும் அனுபவத்தில் சோதிக்க முடியாததுமான எண்ணக் கருக்களை உள்ளடக்கியது.

(உ-ம்) சிக்மன்ட் புரொய்டின் உளப்பகுப்புக் கோட்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள நனவுமனம், நனவிலிமனம், இட், ஈகோ, சுப்பர் ஈகோ போன்ற எண்ணக்கருக்கள். எனினும், சிலவேளைகளில் வாய்ப்பு பார்க்கக்கூடிய சரியான எதிர்வு கூறலுக்கும் சாத்தியம் உண்டு என்பதை தெரிதல் வேண்டும்.

(உ-ம்) உல்லாச பிரயாணிகள் வரும்போது நாட்டுக்கு வருமானம் அதிகரிக்கும்" எனும் எதிர்வுகூறல்.

அடுத்து, சமூக விஞ்ஞானத்தில் காணப்படும் கோட்பாடுகளில் பல சோதிக்க முடியாதவையாகும். ஏனெனில், அவற்றைச் சோதிப்பதில் இடர்பாடுகள் காணப்படுவதே இதற்குக் காரணம்.

எடுத்துக்காட்டாக, சமூக விஞ்ஞானக் கோட்பாடுகள் மனித நடத்தைகள் பற்றி விளக்குவதால் அவற்றைச் சோதிப் பதற்கு பரிசோதனைகள், கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த முடியாது.

(உ-ம்) சமூக ஒப்பந்தக் கோட்பாடு

இவற்றைவிட, சமூக விஞ்ஞானக் கோட்பாடுகளில் பல சோதிக்க முடியாதவை என விளக்குவதற்கு மாணவர் மேலும் சில விளக்கங்களைத் தெரிந்திருத்தல் அவசியமானது ஆகும்.

அடுத்து, உறுதியான தரவுகள் போதியளவு இல்லாமையினால் சமூக விஞ்ஞானங்கள் பாதிப்படைந்துள்ளதை மாணவர் தெரிந்து கொள்வது அவசியமானதாகும். அதாவது, சமூக விஞ்ஞானத் தரவுகளின் ஸ்திரத்தன்மை குறைவாக உள்ளது என்ற கருத்தை ஆராய்தல் வேண்டும். சமூக விஞ்ஞான ஸ்திரத்தன்மை குறைவுக்குக் காரணங்களை, ஆசிரியரின் வழிகாட்டல் மூலம் அறிந்து கொள்ள வேண்டும்.

சமூக விஞ்ஞானமானது, அதனுடைய ஆய்வுக்குப் பயன்படுவது அவதான முறையாக இருந்தாலும் அவை புள்ளியியல் (எண் ரீதியான) தன்மை கொண்டவை ஆகும். சமூக விஞ்ஞானத்தில் பரிசோதனை பயன்படுத்த முடியாத காரணத்தால் அவதானத்தை அடிப்படையாகக் கொண்ட பேட்டிமுறை, வினாக்கொத்து முறை, தனியாள் ஆய்வுமுறை என்பவை பயன்படுகின்றன. இவற்றின்மூலம் பெறப்படும் தரவுகள் பெருமளவுக்கு பண்புரீதியான தரவுகளாகக் காணப்படுகின்றன. இவை கணிதரீதியான தரவுகளாகவும் காணப்படுகின்றன. இவை கணித ரீதியான பகுப்பாய்வுக்கும், விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் ஏற்றவை அல்ல எனவே கணித ரீதியான பகுப்பாய்வு செய்வதற்கு எண் ரீதியான தரவுகள் தேவை.

இந்நிலையில்- சமூக விஞ்ஞானத்தில் அவதான முறைகளூடாகப் பெறப்பட்ட பண்புரீதியான தரவுகளை எண் தரவுகளாக மாற்றுவதற்கும், கணிதரீதியான பகுப்பாய்வுகளைச் செய்தற்கும் புள்ளிவிபரமுறைகள் உதவுகின்றன. அதாவது, மாதிரி போன்ற முறைகளும், சராசரி முறைகள் போன்றவையும் ஆகும். இதனால் சமூக விஞ்ஞானம் அளவீட்டுத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அடுத்து, சமூக விஞ்ஞானத்தில் கணினி பயன்படுத்தும் விதம் பற்றி அறிவது அவசியமானதாகும். இன்று - வணிகம், போக்குவரத்து, தொடர்பாடல், கல்வி, விளையாட்டு என எல்லாச் சமூக விஞ்ஞானத் தோற்றப்பாடுகளிலும் கணினி பயன்படுத்தப்படுகின்றது. எனினும் - சமூக விஞ்ஞானத்தில் கணினி பயன்படுவதை உதாரணங்கள் மூலம் மாணவர் ஆசிரியரிடம் அறிய வேண்டும்.

சமூகவிஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் ஒரு தோற்றப்பாடு தொடர்பாகப் பல கோட்பாடுகள் காணப்படுவது சமூக விஞ்ஞானத்தின் பலவீனம் ஆகும். எடுத்துக்காட்டாக - அரசியல் விஞ்ஞானத்தில் அரசின் தோற்றம் பற்றி மாக்சிசக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாடு போன்றவை காணப்பட்டன. இங்கு எதனை ஏற்பது எதனை நிராகரிப்பது என்பதில் பல பிரச்சினை எழுகிறது. இதனால் சமூக விஞ்ஞானம் பலவீனம் அடைந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விடயம் ஆசிரியரிடம் கற்றல் வேண்டும்.

சமூக விஞ்ஞான விதிகள், கொள்கை பற்றி மாணவர் அறிவது அடுத்து முக்கியமானதாகும். சமூக விஞ்ஞான விதிகளாக சமூக விஞ்ஞானத் துறைகளாகிய பொருளியல், சமூகவியல் என்பவற்றில் இருந்து விதிகளைக் குறிப்பிடலாம்.

1) கேள்வி விதி
2) நிரம்பல் விதி
3) கெயின்சின் பொருளாதாரக் கோட்பாடு
4) மல்தூஸின் சனத்தொகைக் கோட்பாடு
5) சமூக ஒப்பந்தக் கோட்பாடு

சமூக விஞ்ஞானத்தில் சோதனை தொடர்பாகவும், கருவிகள் தொடர்பாகவும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இயற்கை விஞ்ஞானம் ஆய்வு செய்யும் இயற்கை தோற்றப்பாடுகளை கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி ஆய்வு செய்வதனைப் போல, சமூக விஞ்ஞானம் ஆய்வு செய்யும் சமூக தோற்றப்பாடுகளைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தி சோதனை செய்ய முடியாது.

மேலும் - சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் இயற்கை விஞ்ஞானத்துடன் ஒப்பிடும்போது கருவிகளின் பயன்பாடு மிகவும் குறைந்தநிலையில் காணப்படுகிறது. சில இடங்களில் மட்டும் கருவிகள் பயன்படுகின்றன. இது தொடர்பான வினாக்களும் மேலதிக விளக்கமும் ஆசிரியர் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சமூக விஞ்ஞானங்களில் புறவயத்தன்மையை நோக்கும் போது- புறவயம் என்பது ஆய்வாளன் ஒருவன் தனது சொந்தக் கருத்துக்களுக்கு இடமளியாது, தனக்கு புறத்தே உள்ள விடயங்களைத் தெரிந்து கொள்ளுதல் ஆகும். சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் - புறவயத் தன்மையானது மிகவும குறைந்தநிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கான காரணங்களையும், வினாக்களின் வடிவங்களையும் மாணவர்கள் ஆசிரியரிடம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அடுத்து, சமூக விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில், சமூக விஞ்ஞானத் தரவு சேகரிக்கும் முறைகள் முக்கியமானதொன்றாகும். சமூக விஞ்ஞானத்தில் தரவு சேகரிக்கும் முறைகள் பலவாகும்.. அவற்றில் முக்கியமானவை பின்வருவன ஆகும்.

(1) வினாக்கொத்து முறை/கேள்விக் கொத்து முறை
இம்முறை என்றால் என்ன? பண்புகள், நன்மைகள், தீமைகள் போன்றவற்றை மாணவர் அறிய வேண்டும்.

(2) பேட்டி முறை / செவ்வி முறை / நேர்காணல்/ உரையாடல்முறை
பேட்டி என்றால் என்ன? பண்புகள், நன்மைகள், தீமைகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

(3) கட்டுப்பாட்டுக் குழுமுறை
இம்முறை என்றால் என்ன என்பதும் சமூக விஞ்ஞானத்தில் கட்டுப்பாட்டுக் குழுமுறையின் பயனும் இயற்கை விஞ்ஞானத்தில் கட்டுப்பாட்டுக் குழுமுறையின் பயன்பற்றியும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

(4) ஏடுகளின் ஆய்வுமுறை
(5) அகழ்வாய்வு முறை
(6) தனியாள் ஆய்வு முறை
(7) அகநோக்கு முறை/உண்ணோக்கு முறை
(8) வெளிக்கள ஆய்வு முறை
(9) சமூக அளவை முறை
(10) வளர்ச்சி ஆய்வு முறை

அடுத்து - சமூக விஞ்ஞானத்தில் தொன்மைப் பழங்குடியினரை ஆய்வு செய்யும்போது ஏற்படும் இடர்பாடுகளை மாணவர் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு சில இடர்பாடுகள் காரணமாகவே தொன்மைப் பழங்குடியினரை ஆய்வு செய்யும் ஆய்வாளன் நீண்டகாலம் அவர்களுடன் தங்கியிருந்து நேரடியான அவதானங்களின் மூலமாக அவர்களை பற்றிய தகவல்களைப் பெறவேண்டியுள்ளது.

மாணவர் பின்வரும் வினாக்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது ஆகும்.

1. சமூக விஞ்ஞானங்களின் விஞ்ஞானத்தன்மை குறைவதற்குக் கீழ்வரும் காரணிகளைத் துணை கொண்டு விளக்குக.
   1. தரவுகள் தொடர்பான பிரச்சினை
   2. விஞ்ஞான முறை தொடர்பான பிரச்சினை
   3. கருதுகோள் தொடர்பான பிரச்சினை
   4. காரணகாரியம் தொடர்பான பிரச்சினை

2. சமூக விஞ்ஞானத்தின் புள்ளி விபரவியல் பயன்படு முறையை உதாரணம் மூலம் விளக்குக.

3. சமூக விஞ்ஞானங்கள் தங்களது பிரதான முறையாக நோக்கல் முறையைப் பின்பற்றுகின்றன.
   1. இங்கு நோக்கல் என்பதனை வரையறை செய்க?
   2. சில சமூக விஞ்ஞானங்கள் இம்முறையை மாற்றி அமைப்பதாகக் கூறப்படுகிறது. இதன் தாற்பரியம் யாது?
   3. சமூக விஞ்ஞானங்கள் ஏன் தனது பிரதான ஆய்வு முறையாக நோக்கல் முறையினை பின்பற்றுகின்றன?

**P.கமல்**
B.A.(Cey) Spl. TRD Com. Dip. in, Mgt (OUSL)
(ஆசிரியர், யா/இந்து மகளிர் கல்லூரி)

5ஆம் பக்கத் தொடர்ச்சி

**Ears:- Big, small ........**
**Eg:- Her ears are small.**
**Shoulders:- broad, narrow ........**
**Eg:- His shoulders are broad.**
**Build:- Fat, plump ........**
**Eg:- She is a fat girl.**
**Height:- Short, tall ........**
**Eg:- she is short.**
**Age:- young, old ........**
**Eg:- Ravi is a young boy.**
**Expression:- serious, friendly ........**
**Eg:- He speaks friendly.**
**General appearance:- pretty, well dressed ........**
**Eg:- She is a well dressed woman.**


**Test-1**

**Write a description about your friend. My friend Shivani is fair and short. She is about 1.55 m in height. She is a fat girl and has long shaped fingers. She has brown hair which she always wears in two plaits. Her eyes are large and lovely. She is in her mid - thirties. Shivani usually wears skirt and blouse, but for special events she wears a salwar. Although she has good features. She often smiles.**

**Compiled by:-**
**PN.Shutharson,**
**Vavuniya Parameswara Vidyalaya.**

# புதுமைகள் செய் புத்தாண்டே!

## நல்வாழ்வுக்குக் கட்டியம் கூற நல்லாண்டாய் நீ வருக!



புதியதோர் ஆண்டின் புதுமுக தரிசனத்திற்காய் காத்திருக்கிறோம். இதோ! வண்ணமுகம் காட்டிவரும் புதியவளை வரவேற்கிறோம். இனி அவளோடு கூடி இன்பம் பொலிய இங்கு வாழப்போகின்றோம். வந்து விட்ட புத்தாண்டு நல்வாழ்க்கைக்குக் கட்டியம் கூறிநிற்கின்றது.

போர்த் துன்பத்தை இன்று காண வில்லை. பொலியும் முகங்கள்; எங்கும் மலிந்துபோன நிலை. வெகு நிம்மதி. இடியாய் அதிர்ந்து உதிரம் உறைய வைத்த ஒலியெல்லாம் போய், சீனவெடியாய் ஒலிக்கும் காலம். நல்ல நம்பிக்கை மனங்களை நிறைக்கும் இத்தருணத்தில் நின்று சில சிந்திக்க வேண்டியது அவசியம்.

கழிந்த காலத்தில் இழந்தவை பற்றி நினைத்தல் மனத்தைக் கனக்கச் செய்யும்தான். ஆனால், இழப்புக்களை மதிப்பீடு செய்வதே அவற்றை ஈடுசெய்யும் பணிக்கு அடிப்படை ஆகும். இழந்த இன்னரும் உயிர்களை மீளப்பெற முடியாது. ஆனால், இழந்த ஏனையவைகள்! அவற்றைப் பெறமுடியும். ஆனாலும்கூட இலகுவில் அல்ல. மிகக் கூடியளவு சிரமப்பட வேண்டிய அவசியம் எம் அனைவருக்கும். ஏனெனில், இழப்புக்கள் சிறியவை அல்ல.

சொத்துக்கள் அழிந்தன. சுமைகள் மிகுந்தன. கல்வித் திறனிலும் பாரிய வீழ்ச்சி. எல்லாவற்றுக்கும் மேலாக, எம்மனப்போக்குகளில்தான் எத்தனை மாற்றம்! நல்ல மாற்றங்கள் வரவேற்கத்தக்கவை. ஆனாலும் சில மாற்றங்கள் மிகவும் வருந்தத் தக்கவை. அன்போடு தாம் வாழ்ந்த வீட்டையும் நிலத்தையும் நேசித்த மனபக்குவம் - இன்று 'வசதியான இடத்தில் வாழ்ந்தால் சரி' என்றாகிவிட்டது. இதனால் விளையப்போவது என்ன? முன்னேறியிருந்த இடங்கள் இன்று மீண்டும் முன்னேறக் காலம் இன்னும் செல்லப்போகிறது. இதனை நாம் சற்று நின்று கவனித்தல் வேண்டும்.

*- சிறிகணேஷ்.*

எனவே, புத்தாண்டில் அனைவரும் தம்பணியை மீள்பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம். நாங்கள் நல்லவராய், வல்லவராய், கல்வியும் கேள்வியும் பெற்றவராய், போட்டியுலகில் பொங்கி எழுபவராய் மாற வேண்டியது மிகமுக்கியம். அதுபற்றி நாம் இனிச் சிந்திப்போம், செயற்படத் தொடங்குவோம். எம்வாழ்வின் மாற்றத்தை மகிமைமிக்க மனமாற்றத்துடன் ஆரம்பிப்போம்.

*'இன்னல் கோடி கடந்து வந்தோம்*
*- பெரும்*
*இருளைத் தாண்டி ஒளியுள்*
*வந்தோம்.*
*செந்நெல் பெருகி சிறப்புகள் ஒளிர*
*சீர்மிகும் ஆண்டாய்ச்*
*சமைத்திடுவோம்'*

## எழுந்திட்ட புத்தாண்டே!

இரண்டினுக்கு விடை கொடுக்க,
மூன்றாகி எழுந்து வருகின்ற,
புத்தாண்டே! சமாதானத் தேவனுமே,
வரவேற்க வாய் கொள்ளாச் சிரிப்போடு,
வாசல்களில் வந்து நிற்கிறாய்.
மிகுந்த மணம் பரப்புகின்ற,
மல்லிகை முல்லையோடு,
மனதுக்குப் பிடித்த ரோஜாக்களையுமே,
நின் பாதங்களுக்குச் சாத்துகிறோம்.
இந்த நிலந்தனிலே,
வதிகின்ற சமாதானத் தேவன்,
எம்மோடு நிரந்தரமாய்
வாழுவதற்கு ஆசிகளைத்,
தந்திட வேண்டுமென்றே.

*-மீசாலையூர் கமலா.*

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயங் கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்
ஆசீர் வணிக நிலையம்
202 A, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-384)

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
துஷா ஒப்ரிசன்ஸ்
இல. 544,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தகுதிபெற்ற கண் பரிசோதனை நிபுணர்களால் இலவசமாகக் கண்பரிசோதனை செய்து, தரமான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவேண்டுமா?
(சி-379)
இன்றே விஜயம் செய்யுங்கள்: துஷா ஒப்ரிசன்ஸ்.


YAMAHA HAPPY NEW YEAR
3 free services 2 Year WARRANTY up to 30000 Kms
2 ஆண்டுகள் உத்தரவாதம்
விற்பனைக்குப் பிந்திய சேவை, இலவச மேலுடை (JACKET)



வை.பீ.எக்ஸ் 125



கிறக்ஸ்





ஆர்.எக்ஸ் 100



கிறக்ஸ் ஆர்

☆புத்தாண்டில் புன்னகை தவழும் பயணத்திற்கு யமஃகா மோட்டார் சைக்கிள்கள்☆
மோட்டார் சைக்கிள் சேவிஸ் வசதிகள்
காலை 8.30 - மாலை 5.30வரை
இரத்தினம்ஸ்
30, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.







கடலலைகளை ஊடறுத்துச் செல்லும் மீனவர்களின் நண்பன்
யமஃகா வெளி இணைப்பு இயந்திரங்களும், உதிரிப்பாகங்களும்.
எரிபொருள் சிக்கனம் | உறுதியான உருவமைப்பு | இதமான இருக்கை
SOLE AGENT FOR ASSOCIATED MOTORWAYS LTD. IN JAFFNA
(சி-385)

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## அன்பளிப்பு; அன்பளிப்பு; அன்பளிப்பு!

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது ஸ்தாபனத்தில் மாணவர்களுக்கான நூல்கள், புத்தகங்கள் (அப்பியாசப் புத்தகங்கள் தவிர்த்து), உபகரணங்கள், காட்வகைகள் மற்றும் கல்வி சம்பந்தமான விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை 2,000/- இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விசேட அன்பளிப்பாக, ஒவ்வொரு 2,000/- இற்கும் சைனாவில் (China) இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பாடசாலைப் புத்தகப்பை அன்பளிப்பாக வழங்கப்படும். கல்லூரி மணவர்களின் நன்மைகருதி சனி, ஞாயிறு நாட்களிலும் விற்பனை நடைபெறும்.

இச்சலுகை கையிருப்பில் உள்ளவரை மட்டுமே.

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(சி-332)

---

## பிரியமுடன் விடை தருகிறேன்!
### போய் வா ... ஆண்டே...

போருக்கு ஓய்வு தந்தாய்!
பகையைத் தணித்தாய்!
புன்னகையுடன் குதுகலித்தாய்!
புதுமைகள் பல செய்தாய்!
சமாதானப் புறாவாய் சிறகடித்தாய்!
அதனால் தானன்றோ
உன்னை ஆனந்தத்துடன்
வழிஅனுப்புகிறேன்
போய் வா... ஆண்டே...

~ சி.என்.ஹெய்ன்ஸ்.

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

அமைதியின் ஒளிக்கீற்றில்
மலரும் 2003 ஆண்டில்
மனிதநேயம் வளரவும்
மனித உறவுகள் பலமடைந்து
சமாதான ஒளியின் பங்காளராகி
சர்வ இன மத பேதமின்றி
உறவுகளையும் உரிமைகளையும் மதித்து
மனித மாண்போடு நிலைத்திருக்க
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

~ ஜோசப் பாலா.

---

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## R.B. Booking Centre

## ஆர்.பி (B) பஸ் ஆசனப் பதிவகம்

யாழ்,கொழும்பு, மட்டக்களப்பு,
திருமலை, கண்டி பஸ் சேவைகள்.

வைரவர் கோவில் அருகாமை,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P-0777-737368.

15, Grand Bazaar,
Jaffna.

யாழ் ~ கொழும்பு செல்லும் பிரயாணிகளின் வசதி கருதி ஒரே இடத்தில் தரைவழி~வான் வழிக்கான விமான~மற்றும் சொகுசு பஸ்~வான் ஆகியவற்றிற்கான ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்வதற்கு நாடுங்கள்.

(சி-381)

---

மலரும் புத்தாண்டு நம் அனைவருக்கும் மகிழ்வாக அமையட்டும்!

## சமாதானமே தேவை!




தீப்பெட்டித் தெரிவிலே சண்டை
சச்சரவு வேண்டாம்.
பாதுகாப்பானதும் தட்டியதும்
பற்றுவதும்
"ஜெட்" தீப்பெட்டிகளே!
'ஜெட்' தீப்பெட்டிகள் சமாதானப்
பறவைகள்!

ஏக விநியோகஸ்தர்கள்:-
அண்ணா தொழிலகம்,
இணுவில்.
TEL: 021 - 2223565
070 - 212298

உங்கள் தெரிவு அதுவே.

(சி-388)

---

## IEE புது வருட வாழ்த்துக்கள்
## Computer Division

121/1, அரசடி வீதி, கந்தர்மடம்.
(கணினி மூலம் ஆங்கில மொழி)
(personal & Group Classes)
ஆங்கில மொழிக் கல்வியாண்டு ~ 2003
தரம் 6 ~ O/L வரை, பொது ஆங்கிலம் A/L (2004 ~ 2005)
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
ஒவ்வொரு வகுப்பிலும் பத்து மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

ஆசிரியர்: திரு.க.ரமணதாசன்.

(சி-298)

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த

## புது வருட வாழ்த்துக்கள்



## மெக்ஸ் (MACSS)

70, பெரியகடை, யாழ்ப்பாணம்.

T.P. 021 - 2222032, 021 - 2222852

- சர்வதேச தரம் பெற்ற சன்யோ, நேஷனல், ரினாய் போன்ற சகல காஸ் குக்கர்களை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
- ஷெல் (SHELL) சமையல் வாயுவின் முன்னோடி விற்பனையாளர்கள்.
- காஸ் அடுப்பிற்குரிய ரெகுலேட்டர், ரபர் டியூப் மற்றும் சகல உதிரிப்பாகங்களும், காஸ் அடுப்பு திருத்த வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கும் ஒரே ஸ்தாபனம்.

(சி-380)

---

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

தரமோ உயர்வு! விலையோ மலிவு!!

## லைடன் புடவை நிலையம்

(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
எமது சிறப்புத்தள்ளுபடி
வாடிக்கையாளர்களின் நலன் கருதி
15.01.2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.


(சி-389)

---



அனைவருக்கும் எமது

GREAVES LIMITED புத்தாண்டுவாழ்த்துக்கள்



## தில்லையம்பதி மோட்டோர்ஸ்

இல 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## AGENTS FOR - GREAVES, SPARE PARTS

- விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.
- மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-387)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
நம்பிக்கை, அதுவே உயிர்ப்புள்ள ஒரே வார்த்தை,
-அலன் ஸ்ரீவன்சன்

# நமது நோக்கு

## ஒளிதரும் ஆண்டாய் வருவாயா..?

சமாதானத்துக்கான நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கான தலைவர் வே.பிரபாகரனின் உத்தியோகபூர்வ அழைப்புடன் ஆரம்பமான 2002 ஆம் ஆண்டு - இந்த ஒருவருட காலத்திற்குள் குறிப்பிடத்தகுந்த வரலாற்றுச் சாதனைகள் பலவற்றையும் எட்டியதாக நிறைவு பெற்றிருக்கிறது.

போரின் தாக்கமும், பதற்றமும் தணிந்து - இலங்கைத் தீவின் நிரந்தர அமைதிக்கும் நிம்மதியான வாழ்வுக்குமான ஆண்டாக, கடந்த ஆண்டில் வெற்றிகரமான பல நகர்வுகள் நடந்தேறியிருக்கின்றன.

இந்தவகையில் - விடுதலைப்புலிகளுடனான நோர்வே அரசாங்கத்தின், சமாதான முன்னெடுப்புக்கான பேச்சுக்கள் லண்டனில் நடைபெற்றது முதல் - அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நேரடியாகப் பங்கேற்ற ஒஸ்லோ பேச்சுக்கள் வரை 'சமாதானத்தின் ஆண்டாக' - 2002ஆம் ஆண்டு கடந்து சென்றிருக்கின்றது என்றே கூறமுடியும்.

இந்த வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு உடன்பாட்டில் தலைவர் வே.பிரபாகரனும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த பெப்ரவரியில் கையெழுத்திட்டமை இலங்கைத்தீவில் சமாதானத்துக்கான உறுதியான அடித்தளமொன்றை ஏற்படுத்தியது.

இதன்வழியே விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்தும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துமுகமாக போர்க்கைதிகளாக இருந்த படையினரை அவர்கள் விடுவித்து - சமாதானத்துக்கான ஆர்வத்தை எடுத்துக்காட்டினர். பதிலுக்கு அரசாங்கமும் - பல ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வந்த பொருளாதாரத் தடைகளை கட்டங்கட்டமாக நீக்க ஆரம்பித்தது.

இத்தகையதொரு ஆரோக்கியமான சூழலில் ஸ்கன்டினேவிய நாடுகளைச் சேர்ந்த யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினரின் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பின் பின்னர்- போர் நிறுத்தத்தை செம்மையாக்குவதற்கும், கண்காணிப்பதற்கும் மாவட்ட ரீதியாக குழுக்கள் இயங்கத் தொடங்கின. இத்தகைய சர்வதேச கண்காணிப்பு - போர் ஓய்வை உறுதிப்படுத்தியதோடு அமைதி முயற்சிகளில் சீர்குலைவு ஏற்படாமலும் தடுப்பதற்கும் பேருதவியாக அமைந்தது.

இதேசமயம் - விடுதலைப்புலிகளே மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதைத் தமது தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய தமிழ்க்கூட்டமைப்புப் பிரமுகர்கள் - விடுதலைப்புலிகள் வழிநடத்தலில் ஒன்றுபட்டுச்செயற்பட இணக்கம் தெரிவித்தமையானது- தமிழ் மக்கள் ஒரே தலைமையின் பலமுடன் திரண்டு நிற்பதை உலகத்திற்கு எடுத்துச்சொன்னது.

அடுத்து, தலைவர் வே.பிரபாகரன் - பல ஆண்டுகளின் பின்னர் சர்வதேசமெங்கும் இருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான செய்தியாளர்களை கிளிநொச்சியில் சந்தித்தார்.

அமைதிப்பாதையில் விடுதலைப்புலிகளுக்குள்ள விசுவாசமும், நீதியான - நியாயமான அரசியல் தீர்வொன்றுக்கான தமிழர்களின் உரிமைப்போரின் உள்ளார்த்தமும் - பிரபாவினால் அழுத்தந்திருத்தமாக எடுத்துக்கூறப்பட்டது. இச்சந்திப்பின் மூலம் - உலகம் கொண்டிருந்த பல சந்தேகங்கள் நீக்கப்பட்டு, தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாடு அனைவராலும் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமான சந்திப்புகள் நீடித்து - செப்ரெம்பர் பதினைந்தில் சர்வதேசத்தின் ஆதரவுடனான உயர்மட்டச்சந்திப்பு தாய்லாந்தில் ஆரம்பமானது. முதற்சுற்றுப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நிறைவுற - தமிழ் மக்களின் உடனடித் தேவையாகவும், யுத்தத்தின் பாதிப்புக் களை நீக்குவதற்கான முதற்படியாகவும் - மீள்குடியமர்வு, மற்றும் புனரமைப்புப்பணிகளிலும் இணைந்து செயற்படவும்- பாதுகாப்பு விவகாரங்களைக் கையாளவுமென உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

இதுவரை காலமும் முன்னைய சிங்கள அரசாங்கங்களின் பொய்ப் பிரசாரத்தினாலும் ராஜதந்திர அழுத்தங்களினாலும் 'பயங்கரவாதிகள்' எனப் பெயர் சூட்டப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் நியாயமான, மக்களுக்கான போராட்டத்தை சர்வதேசம் அங்கீகரிக்க ஆரம்பித்தது.

வெளிநாட்டுத் தூதுவர்களும், சர்வதேச அமைப்புக்களும்- விடுதலைப்புலிகளுடன் நேரடியாக, உத்தியோகபூர்வமான பேச்சுக்களுக்காக வன்னிக்கு வர ஆரம்பித்தது - ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை சர்வதேசம் அங்கீகரித்ததன் வெளிப்பாடாக அமைந்தது.

இந்த ராஜதந்திர வெற்றி ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் பின்னர் சுவிஸ்ஸர்லாந்து அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரிலான விடுதலைப் புலிகளின் விஜயத்திலும் உறுதியானது. இவ்வகையில் சமாதானத்திற்கான உறுதியான நேர்முகமான நிகழ்வுகள் அரங்கேறினாலும் அமைதியை சீர்குலைக்கும் தன்மையான, சமாதானத்திற்கு விரோதமான செயற்பாடுகளும் நடந்தேறியே வந்தன.

குறிப்பாக- கடற்பகுதியில் நடைபெற்ற கடற்படையினரின் அத்துமீறல்கள், உயர்பாதுகாப்புவலயங்கள் என்னும் பெயரால் மக்களின் வாழ்விடங்களை சூழ்ந்த இராணுவ ஆக்கிரமிப்பின் தளர்வற்ற போக்கும்- எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள் மீதான தாக்குதல்கள்- அச்சுறுத்தல்கள், விசேட அதிரடிப்படையினரால் கிழக்கில் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான படுகொலைகள், திருமலையில் நடந்த தமிழ்மக்களின் உயிர்ப்பலிகள், நெடுந்தீவில் நடந்த/ நடைபெற்று வரும் ஈ.பி.டி.பியினரதும் படையினரதும் மக்கள் விரோத செயற்பாடுகள், தலைவர் பிரபா மீதான கொழும்பு உயர் நீதிமன்ற சிறைவாசத்தீர்ப்பு எனத் தொடர்ந்து இறுதியாக - மீள்குடியேற்றத்துக்கான நியாயமற்ற நிபந்தனைகள் என சமாதானத்தை அச்சுறுத்தும் நிகழ்வுகள் தொடரவே செய்தன.

இவை அனைத்துக்கும் மேலாக அமைதியும், அரசியல் வழியில் நியாயமான தீர்வும் வேண்டுமென்பதற்கான முயற்சிகளும் தளர்வின்றி முன்வைக்கப்பட்டுவருகின்றன.

தமிழ் மக்கள்- தமது தாயக மண்ணில், தம்மைத்தாமே ஆளும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்காக- உறுதியான தலைமையின் கீழும், பெருமைப்படும் படைப்பலத்துடனும், மனம் நிறைந்த எதிர்பார்ப்புகளுடனும்- இன்று மலரும் புத்தாண்டை வருக வருக என்றே வாழ்த்தி நிற்கின்றனர்.

# உலகோடு ஒத்திசையும் புலிகளின் சாமர்த்தியம்!

**நேற்றைய தொடர்ச்சி.....**

### பங்களாதேஷ்

இங்குள்ள ஆயுதம் ஏந்தியவர்களின் அடையாளமே கொஞ்சம் குழப்பமானது. அதில் யார் இராணுவம்? யார் போராளிகள? யார் கொள்ளைக்காரர்கள்? யார் வெளிநாட்டவர்கள்? எனப் பிரித்துப் பார்க்க முடியாதபடி எல்லாம் கலந்துகட்டிப் போயிருக்கும்



அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பாகிஸ்தானியர்

ஒரு அமைப்பு.

இப்படியான நாட்டுக்குள்தான் கடந்த டிசம்பர் மாதத்தில் 150 தலிபான் அமைப்பினர், ஆயுதங்களுடன் டாக்கா நகருக்குள் ஊடுருவி இருக்கிறார்கள் என்பதை சி.ஐ.ஏ., பங்களாதேஷ் அரசுக்குத் தெரிவித்தது. ஆனால், யாரும் அகப்படவில்லை எனக் கைவிரித்துவிட்டது பங்களாதேஷ் அரசு.

கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்னர் 150 ஆக இருந்த இந்த எண்ணிக்கை, தற்போது 600 வரையிலாக இருக்கலாம் என உளவுப்பிரிவினரால் கூறப்படுகிறது. இதில் பலர் டாக்கா நகருள் வெளிப்படையாகத் தொலைத்தொடர்பு, மின்அஞ்சல் இலக்கங்கள் எல்லாம் உத்தியோகபூர்வமாக வைத்து இயங்குகிறார்கள் என்பதும், டாக்கா நகருக்குள் நுழைந்து, தலிபான் இயக்கத்துடன் பேசவேண்டும் என்று சொன்னால், நகரில் ஓடும் எந்தக் கார்ச்சாரதியும் நேரே அழைத்துச் சென்று உரிய இடத்தில் சேர்த்து விடுவார் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், பங்களாதேஷ் அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பின்படி டாக்கா நகருக்குள், தலிபான் அமைப்பினர் யாருமில்லை. அமெரிக்காவைப் பொறுத்தவரை அவர்கள் தீவிரமாகத் தேடிவரும் தீவிரவாத அமைப்புக்களின் தலைவர்கள் பலர். அமெரிக்கா நினைப்பதுபோல, அமெரிக்கா தேடிவரும் இடங்களான ஆப்கானிஸ்தானிலோ, பாகிஸ்தானிலோ இல்லாமல், பங்களாதேஷில்கூட மறைந்திருக்கலாம். அங்கிருந்துகூட மற்றவர்களை இயக்கலாம்.

### இந்தியா

இங்கு தீவிரவாதக் குழுக்கள் எத்தனை இயங்குகின்றன என்பது வானத்திலுள்ள நட்சத்திரங்களை எண்ணுவதைவிடக் கடினமானது. அந்த அளவுக்குச் சர்வதேச, தேசிய, பிராந்திய, மாநில, நகர அளவில் தீவிரவாத அமைப்புக்கள் இருக்கின்றன.

ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களின் நடமாட்டம் இருக்கிறது. இவ்அமைப்புக்களுக்குப் பண உதவிகளையும், ஆயுதப் பயிற்சியையும் வழங்குவது பாகிஸ்தானின் உளவுப் பிரிவு என்பதை இந்தியா பல தடவை வெளிப்படையாகக் கூறிவிட்டது.

ஆனால், பலன்தான் எதுவுமில்லை. இந்தியாவில் கிடைக்கப்பட்ட உளவு அறிக்கைகளின்படி- அல்கெய்டா அமைப்பு நேரடியாகப் பெரியளவில் இந்தியாவில் இல்லை. பல பிராந்திய முஸ்லிம் அமைப்புக்களோடு நெருங்கிய தொடர்பு அல்கெய்டா அமைப்பினருக்கு இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

இந்தியப் நாடாளுமன்றம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் 100 சதவீதமும் உள்ளூர் தீவிரவாத அமைப்புக்களின் வேலை அல்ல. அதில் வெளிநாட்டுச் சக்திகளின் பங்களிப்பும் இருக்கிறது என்பதை, இந்திய இராணுவமும் இந்திய வெளிவிவகார அமைச்சும் ஒப்புக்கொள்கின்றன.

அத்துடன், இந்தியாவில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள் சிலவற்றில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் இந்தியாவில் சாதாரணமாகக் கிடைக்கக்கூடியவை அல்ல. இந்த வருடம் தமிழ் நாட்டில் நடைபெற்ற குண்டு வெடிப்பு ஒன்றின் பின்னர், வெடிக்க வைக்கப்படாத வெடிகுண்டுகள் சிலவும், அதற்கான உபகரணங்கள் சிலவும் உள்ளூர்ப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் முக்கியத்துவம் தெரியாமல் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் போட்டு வைத்துவிட்டு இருந்த உள்ளூர் காவல்துறையினருக்கு, டெல்லியில் இருந்து வந்த வெடிகுண்டு நிபுணர்கள் சொல்லித்தான், அதில் உபயோகிக்கப்பட்டிருப்பது சக்தி வாய்ந்த வெடிமருந்து என்பது பற்றியும், அது இந்தியாவுக்கு வெளியே இருந்து கடத்திவரப்பட்ட தகவலும் தெரியவர - அலறியடித்துக் கொண்டு அவற்றைப் பொலிஸ் நிலையத்திலிருந்து அப்புறப்படுத்தினார்கள்.

செப்ரெம்பர் மாதத்தில் கேரளாவில் முஸ்லிம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த சிலரைப் பின்தொடர்ந்த கேரள மாநில உளவுத்துறையினர், மத்திய உளவுத்துறையினருக்கு அனுப்பிய அறிக்கையில், அவர்களால் பின்தொடரப்பட்டவர்களுள் சில வெளிநாட்டவர்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இவர்கள் விழித்துக் கொண்டு கைது செய்ய முன்னர், அவர்கள் தப்பிவிட்டார்கள் எனக் கூறப்படுகிறது. இப்படியாக இந்தியாவின் பல பகுதிகளிலும் வெளிநாட்டு முஸலிம் தீவிரவாத அமைப்பினர் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருப்பது சி.ஐ.ஏக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், நடவடிக்கை உறுதியாக எடுக்க முடியாததன் காரணம்- இந்தியாவின் மிகப்பெரிய பரப்பளவும், அங்குள்ள சிறு சிறு நகரங்களுள் இருக்கும் காவல்துறையினருக்கு இருக்கும் தீவிரவாத அமைப்புப் பற்றியதான குறைவான அறிவும் ஆகும்.

இந்தியாவில் அமெரிக்கா எதிர்நோக்க வேண்டிய ஆபத்து நேரடியானதல்ல. காரணம், இன்றைய நாள்வரை அமெரிக்கத் துருப்புக்களோ, இராணுவ முகாம்களோ இந்தியாவில் இல்லை. இதனால் வரக்கூடிய அபாயம் என்னஎன்றால், டெல்லி போன்ற பெருநகரங்களுள் உள்ள அமெரிக்கத் தூதுவராலயங்கள் மீதான தாக்குதல் அல்லது இந்தியத் துறைமுகங்களுடாகச் செல்லும் அமெரிக்கக் கப்பல்கள் மீதான தாக்குதலாகும்.

ஆனால், மறைமுகமாக இருக்கும் ஆபத்து, அமெரிக்கா தேடிவரும் தீவிரவாத அமைப்புக்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் யார் கண்ணிலும் படாமல், இந்தியாவில் மறைந்து வாழக்கூடிய சாத்தியமும், இந்தியாவில் இருந்துகொண்டே வெளிநாடுகளில் வாழும் தமது சகாக்களை இயக்கக்கூடிய சாத்தியமும் ஆகும்.

### சிங்கப்பூர்

கடந்த வருட இறுதிப் பகுதியில் சிங்கப்பூர் உளவுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்பேரில் ஜமா இஸ்லாமிய அமைப்பினர் தீட்டியிருந்த பாரிய திட்டமொன்று முறியடிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி, சிங்கப்பூர் நகரின் வேறு வேறு பகுதிகளில் 7 இடங்களில் வெடிகுண்டு வெடிக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. ட்ரக் வெடி குண்டுகளின் பெரும் பகுதி சிங்கப்பூரின் துறைமுகம் இருக்கும் பகுதியை இல்க்கு வைத்துத் திட்டமிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. சிங்கப்பூரின் துறைமுகம், ஆசியாவின் மிகப் பெரிய அளவில் கப்பல்கள் வந்துபோகும் ஒரு இடம்.

இந்தத் துறைமுகத்தில் என்ன விஷேசம் என்றால், இங்கு வைத்து கப்பல்களில் நேரடியாக ஏற்றப்படும் அல்லது இறக்கப்படும் பொருட்களின் அளவைவிட, கப்பல்களில் ஏற்கனவே ஏற்றபபட்டுச் சிங்கப்பூர்த் துறைமுகம் ஊடாகச் செல்லும் பொருட்களின் அளவு பலமடங்கு அதிகம். இப்படிக் கப்பல்களில் ஏற்கனவே ஏற்றப்பட்ட பொருட்களின் அளவுகளின் விபரங்களைச் சிங்கப்பூர் துருவித்துருவி அறிவதில்லை. காரணம், அந்தக் கப்பல் சரக்குகள் சிங்கப்பூருக்குள் வரும் பொருட்களாக இல்லாமல், சிங்கப்பூர் ஊடாகப் பிறிதொரு நாட்டுக்குச் செல்பவை என்பதால் - சிங்கப்பூர் அரசு அவற்றைப் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை.


சுருக்கமாகச் சொன்னால், சிங்கப்பூர் ஊடாக சிங்கப்பூர்த் துறைமுக அதிகாரிகளுக்கு என்ன பொருள்? எங்கே போகிறது? என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கும் விதத்தில், சிங்கப்பூர்த் துறைமுகத்தினூடாகக் கொண்டு செல்லமுடியும். இந்த வசதி இருப்பதால், பல ஆயுதம் ஏந்திய கப்பல்களும், இராணுவ ரீதியான பொருட்களைக் கொண்டு செல்லும் கப்பல்களும் சிங்கப்பூர் ஊடாகப் போக்குவரத்துக்களைச் செய்வது வழக்கம்.

சிங்கப்பூர்த் துறைமுகம் ஊடாகச் செல்லும் அமெரிக்கக் கப்பல்களின் எண்ணிக்கை வேறு எந்த ஆசிய நாட்டுத் துறைமுகத்தையும் விட அதிகமானது. இப்படியான துறைமுகமொன்றில் யாருடைய கப்பல் எப்போது, என்ன சரக்குடன் வந்துபோகிறது என்ற விடயம் தெரியவந்தால் தீவிரவாத அமைப்பினர் அவற்றைக் குறிவைக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது.

மேலும், அமெரிக்கா உத்தியோகபூர்வமற்ற முறையில் சில நாடுகளுக்கு மேற்கொள்ளும் ஆயுதவழங்கல்களை முறியடிக்கவும், சிங்கப்பூர்த் துறைமுகத்தை அமெரிக்க எதிர்ப்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

சிங்கப்பூரில் வசிப்பவர்களில் ஒரு கணிசமான சதவீதத்தினர் வெளிநாட்டவர்கள். இதில் யாருக்கு என்ன தொடர்பு இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. சிங்கப்பூர் அமெரிக்காவுக்கு மறைமுகமாக இராணுவ ரீதியாகவோ, நேரடியாகப் பொருளாதார ரீதியாகவோ ஒரு சவாலான இடம்.

இந்த நாடுகளைவிட நாங்கள் அதிகம் சொல்லத் தேவையில்லாத 3 நாடுகள் இந்தப் பிராந்தியத்தில் இருக்கின்றன. அவை மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ். இந்த மூன்று




தீவிரவாதிகளின் மறைவிடப் பட்டியலில் இந்தியாவும்

நாடுகளும ஏதோ ஒரு வகையில் அமெரிக்கா மீதான தாக்குதலில் சம்பந்தப்பட்டிருப்பது ஏற்கனவே வெளியாகி இருக்கும் செய்திகள். செப்டெம்பர் 11ஆம் திகதி தாக்குலுக்கு முன்னர் திட்டமிட்டவர்கள் மலேசியாவில் இரகசியக் கூட்டம் ஒன்றை நடாத்தியதும், செப்டெம்பர் 11ஆம் திகதி தாக்குதலோடு சம்பந்தப்பட்டவர்கள் பிலிப்பைன்ஸில் அதற்கு முன்னர் வெடிகுண்டுடன் கைது செய்யப்பட்டதும் ஏற்கனவே வெளியாகிய தகவல்கள்.

அதுபோல, இந்தோனேசியாவில் சமீபத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்களும் ஏற்கனவே வெளியாகி இருக்கின்றன. ஆசியாவில் அமெரிக்காவுக்கு எந்த நேரத்திலும், எந்த நாட்டாலும் ஆபத்து விளைவிக்கக் கூடிய பலமான தீவிரவாத அமைப்புக்களுக்கும் இடையிலான வலைப்பின்னல் இந்த மூன்று நாடுகளிலும் இருக்கின்றன. மலேசியாவில் இதுவரை, முஸ்லிம் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 60 பேர் மலேசிய உளவுத்துறையால் அடையாளம் காட்டப்பட்டு இருக்கிறார்கள். மேலும், ஜமா இஸ்லாமியாவின் முக்கியமான 200 பேரும் அல்கெய்டாவின் 40 பேரும் மலேசிய எல்லைகளுக்குள் இருக்கலாம் என சி.ஐ.ஏ. கூறுகின்றது. இந்தோனேசியாவின் பாலி வெடிகுண்டு வெடிப்புக்குப் பின்னர், கைதுசெய்யப்பட்டவர்களுள் பெரும்பாலானவர்கள் அதனுடன் நேரடியாக சம்பந்தப்படாதவர்கள் என்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்குப் போக்குக் காட்டுவதற்காகவே பலர் கைது செய்யப்பட்டார்கள் என்று வெளிப்படையாகவே சர்வதேச ஊடகங்களில் கதை அடிபடுவதை ஒதுக்கிவிட முடியாது. குண்டுவெடிப்புடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் பலர் பாலியிலும் ஜகார்த்தாவிலும் இன்னமும் பாதுகாப்பாக இருப்பதாக சி.ஐ.ஏ. கூறுகிறது. ஆனால அவர்களைப் பிடிக்கத்தான் யாராலும் முடியவில்லை.

(நாளை தொடரும்)

- கனடாவிலிருந்து ரிஷி

# இயற்கையை ரசியுங்கள், கற்றுக் கொள்ளுங்கள்!
# சமூகத்தைப் படியுங்கள், சீர்கேடுகளை சாடுங்கள்!!

யாழ்ப்பாணத்திலுள்ள நவீன ஓவியர்களில் முக்கியமான ஓவியர் ஆசை. இராசையர். இவர் தேடல் மிக்க படைப்பாளி. முப்பது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பவர். முன்னாள் றோயல் கல்லூரி ஆசிரியர். 1983 இல் உத்தியோகத்தினைக் கலவரம் காரணமாக விட்டுவிட்டு வந்தவர். ஓய்வூதியம்கூடப் பெறமுடியாத நிலை இன்னும் தொடர்கின்றது.

1980 களின் தொடக்கத்தில் அரசாங்க புத்தக வெளியீட்டுத் திணைக்களத்தில் ஓவியர். 1975 -1983காலப் பகுதியில் முத்திரைப் பணியகத்தில் (philatelic Bureau) முத்திரை வடிவமைப்பாளராகப் பணியாற்றியவர்.

விருது ஏதும் பெற்றீர்களா? என்றால், 'அதனால் எதுவும் நிகழப் போவதில்லையே' என்பவர். (ஆனாலும் பல விருதுகளைப் பெற்றுக் கொண்டவர்).

சிறந்த புகைப்படக் கலைஞரும் கூட, 1990 இல் உள்ளூராட்சி, திணைக்களம், றோட்டரிக் கழகம் நடாத்திய புகைப்படப் போட்டியில் முதற்பரிசினைப் பெற்றவர்.

ஒரு மஞ்சள் வெயில் மாலையில் ஓவியர் ஆசை. இராசையா வீட்டுக்குச் சென்றோம். இனிமையான வரவேற்பு.ஓவியம் போல ஒரு வீடு. அற்புதமான படைப்பாளியைச் சந்திக்க நேர்ந்தது. மாலை நான்கு மணியில் இருந்து இரவு எட்டு மணி வரை எமது நேர்காணல் தொடர்ந்தது. அந்த நேர்காணலில் இருந்து...

*கேள்வி* :நீங்கள் ஓவியரான பின்னணி, அது எவ்விதம் நேர்ந்தது?

*பதில்* : இயல்பான ஈடுபாடு காரணமாக ஓவியத்துறையில் நுழைந்தேன். பள்ளியில் சித்திர பாடத்தில் ஆர்வம் இருந்தது.தேடல், ஊக்கம் ஆழ்மனதில் இருந்திருக்க வேண்டும். தானாகவே பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன்.

இதில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். எனது தாயார் ஒரு தையல்காரி. ஆனால், அவர் இதனை முறைப்படி யாரிடமும் பயிலவில்லை. ஒன்றை பிரித்துப் பார்த்துவிட்டு தைத்து விடுவார். கத்தரிக்கோல் இல்லாத பொழுது அரிவாளின் மூலம் நறுக்குவார். Embroidery மூலம் பூக்கள், பறவைகள் போன்றவற்றை மிக அழகாகச் சித்தரிப்பார். இதுகூட எனது ஓவிய ஆர்வத்தைத் தூண்டக் காரணமாக இருந்திருக்கலாம். எனது ஓவியத்தில் பலவகை ஊடகங்களைப் பயன்படுத்தவும் இது காரணமாகலாம்.

*கேள்வி* : முறைப்படி ஓவியத்தை கற்றுக் கொண்டீர்களா?

*பதில* : ஆம், பள்ளியில் எனது சித்திர ஆசிரியர் துரதிர்ஷ்டவசமாக மட்டம் தட்டும் பேர்வழி. ஆயினும் அச்சுவேலியைச் சேர்ந்த சிங்காரம் என்னும் நண்பரிடம் நீர்வர்ணம் கற்றுக் கொள்ள முடிந்தது. இது எனது ஓவிய ஆர்வத்தை மேலும் வளர்த்தபடியால், க.பொ.த(சா/த) ற்குப் பிறகு நுண்கலைக் கல்லூரியில் ஓவியம் பயிலமுடிந்தது.

அங்கு ரமணி, மேல் வகுப்பில் வரைதல் படித்துக் கொண்டிருந்தார்.

*கேள்வி*: எப்படி உங்கள் ஆற்றலைக் கண்டுபிடித்தீர்கள்?

*பதில்* : ஒரு விடயத்தைக் குறிப்பிட்டால் புரியும் என்று நினைக்கின்றேன். க.பொ.த(சா/த)த்தில் சித்தி அடைய முடியாமல் இருக்க, ஒரு நண்பன் கேத்திரகணித பொறி முறை வரைதல் என்னும் பாடத்தை எடுக்க ஆலோசனை சொன்னார்.

ஆச்சரியப்படும் விதத்தில் அதில் நான் அதிவிசேட சித்தி பெற முடிந்தது. இது எம்முள் இருக்கும் ஆற்றலைக் கண்டுபிடித்து அதற்கேற்ப எமது கல்வியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றதல்லவா?

*கேள்வி* : உங்கள் முன்னோடிகள் என்று யாரைக் கருதுகின்றீர்கள். அல்லது உங்களை கவர்ந்த ஓவியர்கள் யார்? யார்?

*பதில்* :- நான் நுண்கலைக் கல்லூயில் கற்கும்பொழுது கல்லூரி நேரத்தைத் தவிர பிற வேளைகளில் அநேகமான பொழுதுகளைக் கலா பவனத்திலேயே (Art Gallary) செலவழித்துள்ளேன். A.C.G.S. Amaraseka, Lankathilake, David paynter, Donald Ramanayake போன்ற மேதைகளின் படைப்புக்களில் மிகவும் கவரப்பட்டவன்.

இவர்களை விட நுண்கலைக்கல்லூரியில் எனது ஆசான்களான Stanly Abayasinghe, Albert Dharmasiri,Morris perera, Vanigasinghe போன்றவர்களின் வழிகாட்டல்களிலும் இத்துறையில் நான் வலுவாகக் காலூன்ற வழிசமைத்தது என்றால் அது மிகையாகாது.

அவர்கள் கேட்டதன் பிரகாரம் வரையும் ஓவியத்திற்கும் இடையில் அனுபவ வேறுபாட்டை எவ்விதம் உணரமுடிகின்றது?

*பதில்*:- கட்டுப்பாட்டுடன் வரைய வேண்டிய தேவை உண்டு. அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டியது அவசியமாகிவிடுகின்றது. இருப்பினும், இயற்கையான சேகரிப்பு மனதில் நிறைந்துதானே இருக்கின்றது. அது அவ்விதம் வரையும் ஓவியத்துள்ளும் வரவே செய்யும். அதாவது, பயன்படுத்த முடியும். எனவே, இங்கு ஓவியனுக்கு இரண்டும் நிறைவுபெறுவதால் திருப்தி தோன்றி விடுகின்றது.




மேலைத்தேய ஓவியர்களில் பல மேதைகள் என்னுள் தாக்கத்தை உண்டு பண்ணினர். குறிப்பாக Rembrandt (இவர் ஒளிநிழலில் புதுமையைப் புகுத்தியவர்) Vincent Vangough, Paul Sizan , Pissaro Rubans, Monet , Goguan, Signac போன்ற பலரைக் குறிப்பிடலாம்.

பலருடைய படைப்புக்களையும் நாம் பரிச்சியப்படுத்திக் கொள்ள வேண்டியது ஓவியத்தைக் கற்றுக் கொள்பவர்களுக்கு அவசியம்.

*கேள்வி*:- ஒரு கலைஞன் எப்போதும் தன்னுடைய கலைரீதியான வாழவில் குறித்த எல்லை நிலையை அடைய வேண்டும் எனக் கருதுவான். உங்கள் கலைவாழ்வில் இதனை அடைய முடிந்ததா?

*பதில்*:- கலைக்கு எல்லை இல்லை. இந்த நிலையில் ஒரு கலைஞன் தனது எந்தப்படைப்பிலும் திருப்தி காணமுடியாதநிலை தான் யதார்த்தம். ஆனால் ஓரளவுக்குத் திருப்தியைத் தரக்கூடிய படைப்புக்கள் அமையலாம். அந்த வகையில், எமது இனப்பிரச்சினையின் தாக்கம் எம்மை நிலைகுலைய வைத்து ஏதாவதொரு அற்புதம் நடந்தால் ஒழிய எமக்கு மீட்சி இல்லை என்ற கருத்தை வலியுறுத்தி நிற்கும் "மீட்சி" என்ற ஓவியம்.



**ஓரளவு திருப்தி காணக்கூடிய படைப்புக்கள் அமையலாம். ஆனால், திருப்தி காணமுடியாத நிலையே யதார்த்தமானது.**

அவர்களுடைய உருவஅமைப்புக்கள் அவற்றைத் தொகுத்திருக்கும் பண்பு (Composition), வர்ண அமைப்பு (Colours scene), வர்ணத்தைப் பிரயோகித்திருக்கும் முறை (Texure) இப்படிப் பல அம்சங்களை மனதில் பதித்துக் கொள்ள வேண்டியது முக்கியம். இவை எமது படைப்பாற்றலுக்கு மேலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கேள்வி:- உங்கள் கற்பனையில் வரும் ஓவியத்திற்கும் எவருக்காவது

1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்ச்சியில் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட பிரசவவலியை சித்தரிக்கும் "பாலன் பிறப்பு" என்ற ஓவியம்.

இடம்பெயர்ந்து வடமராட்சியில் இருந்தபொழுது கற்கோவளம் கடற்கரைக்குச் செல்லும் மீனவப் பெண்களின் உழைப்பின் உயர்வைச் சித்தரிக்கும் "உழைப்பு" என்ற ஓவியம்.

இன்னும் பல படைப்புக்கள், தலைப்புக்கள் பொதுவாக இருந்தாலும், அவற்றைச் சித்தரிக்கும் முறையில் ஓவியனுக்கு ஓவியன் வித்தியாசப்படுகின்றான்.

ஏனெனில், படைப்பாற்றல் உள்ள ஒவ்வொரு கலைஞனும் தனது படைப்பு வித்தியாசமாக இருக்க வேண்டும் என்றே விரும்புவான். ஆகையால், ஓவியர்கள் தமது படைப்புக்களில் தனித்துவம் பேணுவது தவிர்க்க முடியாததாகின்றது.

*கேள்வி*:-கீழைத்தேயக்கலை, மேலைத்தேயக்கலை இரண்டின் தன்மைகளையும், எம்மத்தியில் அவற்றின் பாதிப்பையும் குறிப்பிட முடியுமா?

*பதில்*:- கீழைத்தேயக்கலை (Eastern Art) இரு பரிமாணம் கொண்டவை. இரேகைகளின் பங்களிப்பு இவ்வோவியங்களில் கூடுதலாகக் காணலாம்.

தெய்வீக உணர்வுகள் இவ்வகை ஓவியங்களில் இழையோடியிருப்பது முக்கிய பண்பு. இதனால்தான், ஆலயங்களில் சுவரோவியங்கள் இந்த முறையில் வரையப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. யாழப்பாணத்தில் உள்ள சில ஆலயங்களில் இம்முறையில் வரையப்பட்ட சுவரோவியங்கள் இருந்ததாகவும், அவை பின்னர் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் அறியக்கிடக்கின்றது.

தெற்கிலே பல ஆலயங்களில் இம்முறையில் ஓவியங்கள் உள்ளன. முக்கியமாக களனி விகாரையில் "சோலியஸ் மெண்டிஸ்" என்ற ஓவியரால் வரையப்பட்ட சுவரோவியங்கள் காத்திரமானவை. சிகிரியா ஓவியங்கள், அஜந்தா, எல்லோரா ஓவியங்களும் இவ்வகையினவே.

மேலைத்தேயக்கலை (Western Art) முப்பரிமாணம் கொண்டவை. இந்தியாவில் ஓவியர் இரவிவர்மா இம்முறையில் வரைந்து புகழ்பெற்றவர். "றபேல்" என்ற மேலைத்தேய ஓவியர்- பெண்களின் சருமத்தின் மென்மையை எண்ணெய் வர்ணத்தில் சித்தரிப்பதில் வெற்றி கண்டாரோ, அவ்வண்ணம் ஓவியர் இரவிவர்மாவும் கேரளப் பெண்களின் வனப்பை வெளிக்கொணர்வதில் வெற்றிகண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஓவியத்தில் விழிப்புணர்வை ஊட்டிய எஸ்.ஆர். கனகசபையும் இவ்வகை ஓவிய முறைமையையே கொண்டுள்ளார். அவரைத் தொடர்ந்து பலராலும் இம்முறையே கையாளப்படுவது குறிப்பிடத்தக்கது.

*கேள்வி* :- ஓவியனுக்குரிய பக்குவம் என்ன? ஓவியனாவது எப்படி?

*பதில்* :- இரசிப்புத் தன்மையும் கலையுணர்வும் உள்ளவன் ஓவியன் ஆவதற்குரிய பக்குவத்தை அடைகின்றான் என எண்ணுகின்றேன்.

அர்ப்பணிப்புணர்வோடு படைப்பாற்றலை வளர்த்துக்கொள்வதன் மூலம் ஓவியன் ஆகலாம். சிறந்த ஆசானின் வழிகாட்டலும், ஓயாத பயிற்சியும் இதற்கு அவசியம்.

*கேள்வி*:- நீங்கள் பயன்படுத்துகின்ற வர்ணத்திற்கும் உங்கள் வாழ்விற்கும் தொடர்பு உண்டா? அதாவது, உங்கள் ஓவியங்களில் அதிகமான கறுப்பு நிறவர்ணம் காணப்படுகின்றது. இதற்காக விசேட காரணம் உண்டா?

*பதில்*:- நாம் விரும்பும் வர்ணங்களுக்கும் எமது மனவோட்டத்துக்கும் தொடர்பு இருப்பதாக உளவியலாளர் கூறுவர். வாழ்வில் எற்பட்ட ஏமாற்றங்களும், துயரங்களும், இரக்க சிந்தையும் அப்படியான வர்ணத்தெரிவுக்கு ஏதுவாக இருக்கலாம். ஓவியத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் தலைப்புக்களும் அதற்குரிய காரணமாகலாம்.

*கேள்வி*:- மார்க் மாஸ்ரரின் ஓவியங்கள் பற்றிச் சொல்லுங்கள்?

*பதில*:- யாழ்ப்பாண ஓவியர்களில் ஓவியத்தில் நவீனத்தைக் கையாண்டு வெற்றி கண்டவர் ஓவியர் மார்க். நவீன ஓவியத்தை எளிமையாகச் சித்தரித்தவர். இரண்டொரு வர்ணங்களைக் கையாண்டே ஓவியத்தைப் பூர்த்தி செய்யும் வல்லமையுடையவர். கண்களில் காணும் எந்தக் கழிவுப்பொருளும் இவருடைய கையில் கலைப்பொருளாக மாறும் அற்புதம் பாராட்டத்தக்கது.

மேலும், மாணவர்களது மனம் நோகாமல் தட்டிக்கொடுத்து வரைய முடியாதவனையும் வரையப்பண்ணுவது அவருக்குக் கைவந்தகலை.

கேள்வி:- நவீன ஓவியர்களின் உருவாக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?

*பதில்*:- மரபுவழி ஓவியத்தின் அடிப்படைகள் யாவற்றையும் பெற்ற



ஓவியர் ஆசை. இராசையர்

பின்னர் நவீன ஓவியத்தில் நுழைவது அவசியம். இது ஒரு அடிப்படைத் தேவை என நினைக்கின்றேன். இது எந்த நவீன ஓவியத்தினையும் அற்புதமாக வரைய உதவும்.

*கேள்வி*:- அதாவது மரபுவழி ஓவியக்கற்கை நவீன ஓவியத்தில் பல பக்க ஆளுமையை வளர்க்க உதவும் என்கின்றீர்களா?

*பதில்*:- ஆம் நிச்சயமாக.

*கேள்வி*:- யாழ்ப்பாணத்தில் ஓவியனுக்குரிய சாதகமான சூழல் எப்படி இருக்கின்றது?

*பதில்*:- தென்பகுதியில் கிடைக்கும் சாதகமான நிலை இங்கு இல்லை. முக்கியமாக இந்த யுத்தசூழல், கலை வளர்ச்சிக்கு ஏற்றதல்ல என்பது யாவரும் அறிந்ததே. யாழ்ப்பாணத்தைக் கலை இரசனை உள்ளவர்களிடமும் கலைக்காக செலவழிக்கும் மனப்பக்குவம் இல்லையென்றே சொல்லவேண்டும்.

*கேள்வி*:- நீங்கள் முத்திரைப் பணியகத்தில் எத்தகைய முத்திரைகள் வடிவமைத்தீர்கள்?

*பதில்*:- சேர் பொன்.இராமநாதன், சேர். பொன்.அருணாசலம், வைத்திலிங்கம் துரைசுவாமி, சேர்.ஜோன் கொத்தலாவல மற்றும் தவலம் என்னும் "பொதி சுமக்கும்" எருதுகள், முதல் புகைவண்டி போன்றவற்றை முத்திரைகளாக வடித்தேன்.

*கேள்வி*:- யாழ்ப்பாணத்தில் தற்பொழுது சிறந்த ஓவியர்கள் என்று யாரைக் குறிப்பிட முடிகின்றது?

*பதில்*:- சிறந்த ஓவியர்கள் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை. ஒவ்வொரு ஓவியனும் ஒவ்வொரு விதத்தில் சிறந்தவர்கள் எனலாம். ஒரு ஓவியரைப்போல இன்னொரு ஓவியர் வரையமுடியாது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு Style உண்டு. ஆயினும்- எனக்குப் பிடித்த ஓவியர்களாக ரமணி, சனாதனன், மு.கனகசபை போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

*கேள்வி*:- இறுதியாக வளர்ந்து வரும் ஓவியர்களுக்கு நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

*பதில்*:- இயற்கையை இரசியுங்கள். இயற்கையிலிருந்து கற்றுக் கொள்வதற்கு நிறைய உண்டு. சமூகத்தைப் படியுங்கள். சமூகச் சீர்கேடுகளைச் சாடுங்கள். சமூகத் திற்குப் பயன்படக்கூடியதாக எமது கலை ஆக்கங்கள் அமையட்டும். கலைப்பணி நல்ல இறைபணி. கலையுணர்வு அற்ற மிருகமாக வாழாமல், கலையுணர்வு உள்ள மனிதனாக வாழ்வோமாக.

நேர்காணல்:-
கோகுலராகவன்

அமைதிச் சூழலில் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இனிதான நல்வாழ்த்துக்கள்!

மணப்பெண் அலங்காரம் உள்ளிட்ட சகல அழகுக்கலை சேவைகளுக்கும், அழகுக்கலை வகுப்புக்களுக்கும் சகல மனையியல் வகுப்புக்களுக்கும்

YOGI BEAUTY PARLOUR
HOME SCIENCE ACADEMY

யாழ்.நகரில் பல வருடங்களாக முன்னோடியாகத் திகழும் அழகுக்கலை நிபுணரும், மனையியல் ஆசிரியையுமான

திருமதி யோகினி சண்முகநாதன்
Mrs. Yogini Shanmuganathan
DIP. IN COSMETOLOGY BEAUTY THERAPHY, HAIR DRESSING AND HOMESCIENCE (INDIA, COLOMBO)

75, அம்மன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். T.P-2222796

(சி-395)



நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்

அழகற்ற பற்களா? மிதப்புப் பற்களா? பார்வைக் குறைபாடா? கவலையை விடுங்கள்! நாடுங்கள்!!

எரிக் கணேஸ்

- மின்னிடும் மகத்தான சங்குப் பற்களை கட்டிடவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடவும்
- கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெறவும்
- கட்டுப் பற்களை சுத்தம் செய்வதற்கான மாத்திரை பெறவும்

நாடவேண்டிய ஒரே நிறுவனம்

எரிக் கணேஸ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2486

கிளை:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல. 80, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

கிளை:
இல. 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

(சி-396)



Serendib Express

AIRLINE

Jaffna Special Feel the Differences

யாழ். மக்களுக்கு செரண்டிப்பின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



(சி-386)

| 500, Galle Road, Wellawatta, Colombo - 06. | 13, Power House Road, Jaffna. | 67A, Wolfendhal Street, Colombo - 13. |
|---|---|---|
| Tel : 505632<br>Fax : 500626 | T.P : 021 - 2223916<br>0777 - 801038 | Tel : 01 - 390128<br>Fax : 074 - 612656<br>Hot line : 0777 - 517019. |



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்யுங்கள்
நமது ஈழநாட்டில்



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்




புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு 14-01-2003 வரை

(3) மூன்றுக்கு மேற்பட்ட Sagem தொலைபேசி வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு (1) ஒரு Sagem தொலைபேசி இலவசமாக வழங்கப்படும்.

விலை- SAGEM-9450/= மட்டும்

சலுகைகளைத் தவறவிடாதீர்கள்

DIAL LINKS
THE PHONE SHOP

இல. 204- K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் - 2225485




(சி-399)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உள்நாட்டு , வெளிநாட்டு தொலைத்தொடர்பு மற்றும் ஃபக்ஸ் வசதி, தரமான போட்டோ பிரதிகள், லேசர் பிரிண்டர் வசதியுடன் கம்பியூட்டர் ரைப் செற்றிங் வேலைகள், C.D Writing, வாடகைக்கு பிளாஸ்ரிக் கதிரைகள், அப்பியாசக் கொப்பிகள், எழுதுபொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள், தினசரிப் பத்திரிகைகள், வாடகைக் கார், வான் மற்றும் ஆட்டோ

RAINBOW

208, முதலாம் குறுக்குத் தெரு,
ஆஸ்பத்திரி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி –021 2223170
(சீ-208)

# வைரஸ் காய்ச்சல் மாதிரிகள் மருத்துவர் குழு சேகரித்தது

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அண்மைக்காலமாகப் பரவிவரும் வைரஸ் காய்ச்சலுக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக, கொழும்பிலிருந்து விசேட வைத்திய நிபுணர்கள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்து, யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் சதுர்முகத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

கொழும்பிலிருந்து நண்பகல் 1.00 மணியளவில் யாழ்ப்பாணம் வருகை தந்த இவ் வைத்திய நிபுணர்கள் குழுவினர், யாழ். போதனா மருத்துவமனைக்கு விஜயம் செய்தனர்.

பணிப்பாளர் அலுவலகத்தில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது. குடாநாட்டில் தற்போது பரவிவரும் வைரஸ் காய்ச்சல் குறித்து மிக நீண்ட நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வேகமாகப் பரவிவரும் மேற்படி காய்ச்சலுக்குக் காரணமான வைரஸ் கிருமியின் மாதிரிகளும் இந்த மருத்துவர் குழுவால் எடுக்கப்பட்டன. இம்மாதிரிகள் மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வைத்திய அதிகாரிகள் குழுவினர்- பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கும் விஜயம் செய்தனர். அங்கேயும், மேற்படி வைரஸ் காய்ச்சல் குறித்தும்- தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இவ் வைத்திய அதிகாரிகள் குழுவில்- பொதுச் சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் டியூனா டி சில்வா மற்றும் வைரஸ் பற்றிய துறைசார் நிபுணர்களான வி.எஸ்.ஆர்.பீரிஸ், ஆர். போயா பொலம்பகோ ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

(லி)

யாழ். வைத்தியசாலையில் நடந்த சந்திப்பு



# டோறாப் படகு மோதியதில் திருமலையில் மீனவர் பலி

(திருகோணமலை நிருபர்)

கடற்படை டோறாப் படகு மோதி, திருகோணமலை மூதூரில் மீனவர் ஒருவர் பலியானார். மற்றொருவர் கடுமையான காயங்களுக்குள்ளாகி மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் மூதூர் குடாகடற்பரப்பில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் யாக்குப் ஜவாத் (வயது 36) என்ற மீனவரேபலியானார். அப்துல் ராசிக் என்பவர் காயங்களுக்குள்ளானார்.

மூதூர் நடுத்தீவு என்னும் இடத்தில் இருந்து, நேற்று அதிகாலை கடலுக்குச் சென்ற இவர்களின் மீன்பிடி வள்ளமே. தாக்குதலுக்கு உள்ளானது. படகு பல சிறு துண்டுகளாக சிதறுண்டது.

இச்சம்பவத்தை அடுத்து- மூதூர் நகரில் பெரும் பதற்றம் நிலவியது. கடைகள் யாவும் பூட்டப்பட்டதோடு, போக்குவரத்துக்களும் இடைநிறுத்தப்பட்டன. இதனால், நேற்று நண்பகல் வரை வெளியிடங்களுக்கான போக்குவரத்துகள் எதுவும் இடம்பெறவில்லை.

படகு வெளிச்சம் இன்றி இருந்ததன் காரணத்தாலும், காலநிலை மிகுந்த பனிமூட்டமாக இருந்ததன் காரணத்தாலும்- முன்னால் வந்த சிறிய படகினை அடையாளம் காணமுடியாதநிலை ஏற்பட்டதாகவும் , தற்செயலாகவே இந்த மோதல் சம்பவம் நடந்ததாகவும், இது திட்டமிட்ட ஒரு நடவடிக்கை அல்ல எனவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(04)

## குருநகர்...

விடுவதற்கும், அப்பகுதியிலுள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களைத் துப்பரவு செய்வதற்கும் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

யாழ். நகரிலும், நகர கரையோரப்பகுதிகளிலும்- பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து, யாழ்.அரச அதிபர் எடுத்துக்கூறினர். அத்துடன், பொன்னாலைப்பகுதி மக்களின் மீள்குடியமர்வு குறித்து விரிவாக எடுத்து விளக்கினார். இவ்விசேட கூட்டத்தின்போதே, குருநகரில் 200 மீற்றர் பிரதேசம் விடுவிக்கப்படவுள்ள தாக தீர்மானம் எடுக்கப்பட்டது. தற்போதுள்ள இறங்குதுறையிலிருந்து பண்ணைப்பக்கமாக இப்பிரதேசம் அமையும்.

மேலும், உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் காணப்படும்- பொதுமக்களின் சுமார் 700 வீடுகளை அவர்களிடம் மீண்டும் ஒப்படைப்பதற்கும் படைத்தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. எனினும்- எப்பகுதியில் இது நடைமுறையாகும் என படைத்தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

(க,01,200)

## அமைச்சர்...

தொடர்ந்து, அங்கிருந்து புறப்பட்ட குழுவினர்- யாழ். நகரத்தில் அமைந்துள்ள 512 ஆவது பிரிகேட் படை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பங்குபற்றினர். பின்னர், அங்கிருந்து புறப்பட்டு- யாழ். நகரக் கரையோரப்பகுதிக்குச் சென்று உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

இதனைத்தொடர்ந்து- யாழ். ஆயர் இல்லத்துக்குச் சென்று, யாழ். ஆயரைச் சந்தித்து உரையாடினர். தொடர்ந்து- மீண்டும் குருநகர் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டனர். இந்துக் கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன், இப்பகுதியின் நிலைமைகளை அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் படை அதிகாரிகளுக்கும் எடுத்துவிளக்கினார். அங்கிருந்து புறப்பட்டு, பலாலிப் படைத்தளத்தை மாலை 4.15 மணியளவில் சென்றடைந்த பின்- அங்கு மீண்டும் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் இராணுவத்தளபதி லயனல் பலகல்ல, யாழ். இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, யாழ். பிரதித் தளபதி இரட்ணசபாபதி உட்பட உயர் படையதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் மேற்படி குழுவில் அடங்கியிருந்தனர்.

(க,லி)

## கடலோரக்காற்று...

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஏற்றிவைத்தார். தொடர்ந்து, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை, கடற் கரும்புலி மேஜர் செந்தாளனின் தாயாரும், கடற்கரும்புலி மேஜர் நியூட்டனின் தந்தையாரும் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை, யாழ்.மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் முகுந்தா ஆற்றினார். தொடர்ந்து- துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, நுண்கலைத்துறையைச் சேர்ந்த கலாநிதி க.சிதம்பரநாதன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

அடுத்து- 'கடலோரக்காற்று' திரைப்படத்தின் வெளியீட்டுரையை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார்.

கடற்புலிகளின் மகளிர் பிரிவுத் தளபதி கல்யாணி ஒளிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைக்க, கடற்புலி மேஜர் யாழ்வீரனின் தாயார் சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

திரைப்படத்தின் மதிப்பீட்டுரைகளை- சலன சித்திர அமைப்பைச் சேர்ந்த ஞ.தேவதாசனும், சமூகவியற்துறைத் தலைவர் என். சண்முகலிங்கனும் நிகழ்த்தினர்.

கல்விக்கழகத்தைச் சேர்ந்த கவியன்பனின் நன்றியுரையைத் தொடர்ந்து, அங்கு கூடியிருந்த பெருமளவிலான மக்கள் முன்னிலையில், அகலத்திரையில் 'கடலோரக் காற்று' திரையிடப்பட்டது.

(கி,ச)

LOGIC
A/L 2003 - முன்னோடிப்பரீட்சை
* வெளிமாணவர் பரீட்சைக்குத் தோற்றமுடியும்.
* விண்ணப்ப முடிவுத் திகதி ஜனவரி-10
பரீட்சை நிலையம் - மதுபாரத்-இந்து மகளிர் ஒழுங்கை.
மணி கல்வி நிறுவனம்- வேலணை.
பிறைற்மன் -நீராவியடி.
தொடர்பு: 0777- 240640
By: கமல் - B.A (cey ), Dip.in.Mgt
(J/Hindu Ladies college)

எமது புதுவருட வாழ்த்துக்கள்
STP
Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Hardware
Dip. in Video Mixing
Dip. in Studio Designing
Internet & E- Mail
Group and Personal Classes
START 11- 01- 2003
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P-2222674 Jaffna & Chavakachcheri

SUPER GRADE - 6
தரம் 5 புலமைப்பரிசில் - 2002 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மட்டும் புதிய
தரம் – 6 SUPER GRADE
பிரிவு ஆரம்பம் - 02.01.2003
(பி.ப.4 மணி)
* 30 மாணவர் மட்டும் இணையலாம்
தரம் 4 முதல் O/L வரை இவ்விரண்டு பிரிவுகளுடன் இன்னும் சில அனுமதிகள் வழங்கப்படும்.
இறுதிநாள் 05.01.2002
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கோயில் முன்பாக)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!
Global Communications
குளோபல் தொலைத் தொடர்புச் சேவை
M.ANANDASIVAM
Point - Pedro Road,
KODIKAMAM.
TEl. 070 21 2437
070 21 2627
0777 729821
0777 727584
(079)

எமது வாடிக்கையாளர்களுக்கு புது வருட வாழ்த்துக்கள்!
டயலொக் மேசைத் தொலைபேசி,
டயலொக் கையடக்கத் தொலைபேசி,
'சிம்' போடக்கூடிய மேசைத் தொலைபேசிகள்,
அலைவரிசைக்குரிய அன்ரனாக்கள்,
கைத்தொலைபேசிகள் விற்பனைக்குண்டு.
* போன்கள் திருத்தியும் கொடுக்கப்படும்
சிங்கப்பூர் பீடா
174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக) (0777-242416)
(சீ-401)

A/L 2005
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி - 4
காலை - 8.00 மணி
D.M.I
(சீ-345) யாழ்.நகர்

## இலக்கிய வித்தகர் வாழி



ஈழத்து இலக்கிய உலகில் பல தடங்களைப் பதித்து இன்று **அகவை அறுபதில** கால் பதிக்கும் மூத்த எழுத்தாளர் திரு. செம்பியன் செல்வன் அவர்களை ஈழத்து 'இலக்கிய வித்தகர்' என நாமம் சூட்டி மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டம்.

(சி/394)

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.